98

தாரண௵
வைகாசி - ஆனி மீ

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை - 6

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

June, 1944
Vol. 3, No. 6

JL
Q22ணை211, N41
N44·3·6
210126.

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸத் ஸம்ப்ரதாய தீபம்	174
2.	உண்மை வைணவன்	179
3.	வங்கீபுரம் காருகுரிச்சி வித்வான் ஸ்ரீ. உ. வே. வேங்கட வரதாசார்ய ஸ்வாமி	186
4.	உந்தி பறத்தல்	189
5.	‘शबरी’	193
6.	செய்திகள்	195
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	199
8.	ப்ரஸ்நோபநிஷத்	177

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 3	தாரண ௵ வைகாசி - ஆனி ௴	ஸஞ்சிகை 6

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாந: ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவைகளைப் போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

15 JUL 19
MADRA

210126

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸத் ஸம்ப்ரதாய தீபம்

[வித்வான் சிலுக்கூர் ஸ்ரீ. உப. மா. வேங்கட ராகவாசார்ய ஸ்வாமி
சிரோமணி, ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம் & ஏஜண்டு, ஹைதராபாத் ஸ்டேட்,
கத்வால் ஸம்ஸ்தாந தர்மாதிகாரி]

[ஸம்புடம் 3 : ஸஞ்சிகை 5, பக்கம் 155-ன் தொடர்ச்சி]

இவ்வாசார்யர்கள் இவ்வாறு இஜ்ஜீவராசிகளுக்குச் செய்த உபகாரத்தைப் பூர்வாசார்யர் ஒருவர் பின்வரும் ஸ்லோகத்தால் ஸங்க்ரஹித்திருக்கிறார் :—

“லக்ஷ்மீநாதாக்யஸிந்தௌ சடரிபுஜலத: ப்ராப்ய காருண்யநீரம்
நாதாத்ராவப்யஷிஞ்சத் ததநு ரகுவராம்போஜ சக்ஷுர்யுகாப்யாம் |
கத்வா தாம் யாமுநாக்யாம் ஸரிதமத யதீந்த்ராக்யபத்மாகரேந்த்ரம்
ஸம்பூர்ய ப்ராணிஸஸ்யே ப்ரவஹதி நிதராம் தேசிகேந்த்ரௌக
மேக: ||”

மேகமானது காலேவர்ஷியாக இருந்து, திங்கள் மும்மாரி பெய்து, ஸர்வமான பயிர்களுக்கும் யோக க்ஷேமத்தை உண்டுபண்ணுமாப் போலே, சடகோப னென்கிற ஜ்ஞாந ஸ்வரூபமான மேகமானது திங்கள் மும்மாரி யன்றிக்கே சேதநர்களாகிற பயிர்களுக்கு ஜ்ஞாநத்தாலே அநவரதமாக வர்ஷணம் செய்கிறது.

மேகமோ வென்றால் கேவல ஜலத்தை வர்ஷிக்கிறது. சடரிபு மேகமோ காம க்ரோதாதிகள் அணுகவொட்டாமல் அவைகளுக்கு ஹேதுவான சடவாயுவைக் கண்டித்து, அதுமூலமாக ஸத்வ குணத்தை அதிகப்படுத்தி, ‘ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்’ என்னும்படி செய்து, ‘ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்’ என்று பகவான் சேதநனைக் கொண்டாடும்படியான ஓர் நிலைமையை உண்டுபண்ணியும் மோக்ஷாந்தமான ஐஶ்வர்யத்தை வர்ஷிக்கின்றது.

மேகமானது ஸர்வ தேசத்திலும் ஒரே மாதிரியாக வர்ஷியாமல் காடு மலை ஸமுத்ரம் முதலான இடங்களிலேயே அதிகமாக வர்ஷிக்கிறது இந்த சடகோப மேகம் அப்படி யன்றிகே, ஸர்வ தேசத்திலும் ஸர்வ காலத்திலும் க்ருபையாகிற ஜலத்தைக் கேவல நாராயணனாகிற ஸமுத்ரத்திலிருந்து அடையாமல் (அப்படி அச்சமுத்ரத்திலிருந்து ஜலத்தைப் பெற்றிருந்தால் அது பலத்தை யளிக்க வல்லமை யற்றதாய்விடு மென்றெண்ணி) ஸ்ரீ விஶிஷ்டனான நாராயணனாகிற ஸமுத்ரத்திலிருந்து அத்

திவ்ய தம்பதிகளுடைய க்ருபையாகிற ஜலத்தைப் பாநம் பண்ணி அந்த ஜலத்தை லோகோபகாரகமாக வர்ஷிக்கிறது.

நம் ஸம்ப்ரதாயத்தில் லக்ஷ்மீயுடன் கூடிய நாராயணனே ப்ராப்யனும் ப்ராபகனும் ஆகிறான். நாராயணனுக்கு ப்ராப்யத்வமும் ப்ராபகத்வமும் உள்ளனபோல், பிராட்டிக்கும் இவை உள்ளன. இது பற்றியே 'ஆகாரத்ரயஸம்பந்நாம்' என்று அபியுக்தரும் அருளிச் செய்தார். பிராட்டிக்குப் பெருமாளைவிடப் புருஷகாரத்வம் ஒன்று அதிகப்படியாக இருக்கிறது. பெரிய பிராட்டியார் ஸர்வ ஜீவராசிகளுக்கும் நியந்த்ரியாக இருக்கிறாள் என்று ஸ்ருதியும் ["ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம் தாமிஹோபஹ்வயே ஶ்ரியம்"] சொல்லுகிறது. 'ந கஶ்சிந்நாபராத்யதி' என்று ஸாபராதிகளிடமும் மிகவும் தயையைப் பாராட்டி அவர்களையும் ரக்ஷிக்கவல்ல ஸ்வபாவமுள்ளவளாகையாலே, அதவா: பிராட்டி த்ருஷ்டியில் ஒருவரும் ஸாபராதியல்ல என்னும் அபிப்ராயத்தாலோ, அதவா: உலகில் எல்லோரும் ஸாபராதிகளாகையால் ஒருவரும் தண்ட்யரில்லை என்னும் அபிப்ராயத்தாலோ, அரக்கர் விஷயத்தில் பிராட்டி அவ்வாறு அருளிச் செய்தபடி. இப்படி தயாமூர்த்தியான பிராட்டியாருடைய க்ருபா ஜலத்தைப் பெற்றதாகையால், இந்த சடகோபனாகிற மேகம் ஸர்வோத்க்ருஷ்டமிறே. 'வேரிமாறாத பூமேலிருப்பாள் வினைதீர்க்கும்' [நித்ய கந்த யுக்தமான தாமரைப்பூவின் மேல் நித்யவாஸம் செய்யும் பெரிய பிராட்டியார் ஸம்ஸாரமாகிற வினையைத் தீர்ப்பாள்] என்று நம்மாழ்வார் அருளிச் செய்தார். இதனால் பிராட்டிக்கு உபாயத்வம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டது.

சடரிபுவாகிற மேகமானது ஸ்ரீ விஶிஷ்டனான நாராயணனாகிற ஸமுத்ரத்திலிருந்து தயையாகிற ஜலத்தைப் பாநம் பண்ணி நாதமுனிகளாகிற பெரிய பர்வதத்தில் அந்த ஜலத்தை வர்ஷித்தது. நாதமுனிகளுக்கு யோகதசையில் ஸேவை ஸாதித்து, தாம் திவ்யதேசத்து எம்பெருமான்கள் விஷயமாகக் கவிபாடிய ஆயிரம் பாட்டுக்களையும் ரஹஸ்யார்த்தங்களையும் வ்யாஸ ஸூத்ரத்தையும் உபதேசித்து, சிஷ்ய கோடிக்கு இவைகளை ப்ரசாரம் செய்யும்படி நியமித்த விஷயம் குருபரம்பரை மூலம் வ்யக்தம். இச் சடரிபு மேகமானது, இவ்வாறு நாதமுனிகளாகிற பர்வதத்தில் தயா ஜலத்தை வர்ஷிக்க, அந்த ஜலம் நாதமுனிகளை ஆஶ்ரயித்த உய்யக்கொண்டார் மணக்கால் நம்பிகளாகிற மலைச்சுனைகளில் அப்பர்வதத்தின் இரண்டு புறமும் சாமரங்கள் போல் ப்ரகாசித்துக்கொண்டு கங்கா ப்ரவாஹம்போலே சென்று ஆளவந்தாரென்கிற பெரிய ஆற்றில் விழுந்தது. நாதமுனிகளுடைய திருப் பேரனான யமுனைத் துறைவர் என்கிற ஆளவந்தாருக்கு, உய்யக்கொண்டார் ஸமஸ்த விசேஷார்த்தங்களையும் திருவாய்மொழியையும் உபதேசித்ததும், நாதமுனி ஶிஷ்யரான குருகைக் காவலப்பன் யோகரஹஸ்யத்தை

யும் மணக்கால் நம்பி திருவிலச்சினை திருமந்த்ரார்த்தம் முதலானவை களையும் ப்ரஸாதித்து, அவ்வாளவந்தார் மூலம் ஸம்ப்ரதாயாபிவ்ருத்தி யைச் செய்துவைத்தது லோக ப்ரஸித்தம். ஆளவந்தார் மஹாபாஷ்ய பட்டரிடம் வித்யாக்ரஹணம் செய்யும்போது, ராஜ ஸம்ஸ்தாநத்தி லிருக் கிற ஆக்கியாழ்வான் தமக்கு வித்வான்க ளெல்லோரும் கப்பம் கட்ட வேண்டுமென்று ஒரு லேகத்தை எழுதி, மஹாபாஷ்ய பட்டருக்கு அனுப்ப, அதைப் பார்த்து அந்தப் பத்ரத்தைக் கிழித்துவிட்டு,

“ந வயம் கவயஸ்து கேவலம் ந வயம் கேவலதந்த்ரபாரகா: |
அபிது ப்ரதிவாதிவாரணப்ரகடாடோபவிபாடநக்ஷமா: ||”

என்கிற ஶ்லோகத்தை எழுதி அனுப்ப, ராஜாவும் அவரை ஸமஸ்த மர்யாதைகளுடன் வரவழைக்க, ஆளவந்தாரும்,

‘ஆஶைலாதத்ரிகந்யாசரணகிஸலயந்யாஸதந்யோபகண்டாத்’

என்கிற தம்முடைய பிருதைக் கூறி ஆக்கியாழ்வானையும் வாதத்தில் ஜயித்து, மணக்கால் நம்பியாலே ப்ரதிதிநமும்கொடுக்கப்பட்ட தூதுவளைக் கீரையை அமுது செய்து ஜ்ஞாந வ்ருத்தராக எழுந்தருளியிருந்து, பெரிய நம்பி திருக்கோட்டியூர் நம்பி முதலானவர்களுக்கு ஸமஸ்த ரஹஸ்யார்த் தங்களையும் உபதேசித்து ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்துகொண்டிருந் தார். ஆளவந்தார் பெரிய நம்பி மூலமாக ஸ்ரீ ராமாநுஜாசார்யர் என்கிற ஸ்ரீ பாஷ்யகாரருக்குத் திருவிலச்சினை திருமந்த்ரார்த்தம் முதலானவை களை உபதேசிப்பித்தார். இந்த ஆளவந்தாராகிற மஹா நதியானது க்ஷாம காலங்களிலும் ஜலம் வற்றுமலிருக்கும்படியான ராமாநுஜரென் கிற ஒரு தாமரைக் குளத்தைப் பூரித்தது. ராமாநுஜர் ஸ்ரீ ஆளவந்தா ருடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு ஸகல ஶாஸ்த்ர நிஷ்ணாதராய்க் கடைசியாக யாதவப்ரகாஶரிடம் வித்யாக்ரஹணம் செய்துகொண்டிருக் கையில், ‘தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ’ என்கிற ஶ்ருதிக்கு யாதவப்ரகாஶர் அபார்த்தம் செய்ய, அது ஸஹிக்கமாட்டாமல் ராமாநு ஜருடைய திருக்கண்களிலிருந்து பாஷ்பங்கள் கிளம்பி ரக்தம்போலே யாதவப்ரகாஶருடைய துடையில் விழுந்து பாதை செய்ததை யோசித்து, ‘இவர் ஒரு மஹநீய புருஷர்; இவர் தம்முடைய பாண்டித்யத்தாலே நம் அத்வைத ஸம்ப்ரதாயத்தை மூலோச்சேதநம் செய்துவிடுவர்’ என்று எண்ணி இவரைக் கங்கையில் தள்ளிவிட எண்ணங்கொண்ட கதையை ராமாநுஜ சரிதத்தில் விசதமாகக் கண்டுகொள்ளலாம்.

‘ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம பராஸ்ய ஶக்தி:, அபஹதபாப்மா, [illegible], அக்நிரவமோ தேவதாநாம் விஷ்ணு: பரம:’ இவை முதலான ஶ்ருதிகளாலே, பகவான் ஸர்வ கல்யாணகுணாகர னென்றும், ஜீவாத்மாக்களுக்கு நியந்தா வென்றும், ‘தஜ்ஜலாநிதி ஶாந்த உபாஸீத’ இத்யாதியாய் ஜகத்ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தா வென்

றும், இப்படிக்குப் பகவானுக்குப் பரதத்வத்தை நிஷ்கர்ஷம் செய்து மாயிகளையும் அத்வைதிகளையும் ஜயித்து, இச்சமயத்திற்கு அடிப்படியாக வ்யாஸ ஸூத்ரங்களுக்குப் போதாயநாதி பூர்வாசார்யர்கள் செய்த ப்ரஹ்மஸூத்ர வ்ருத்தியை அநுஸரித்துப் பாஷ்யம் செய்து, அதை ஸ்ரீ நகரீ என்கிற வித்யாபீடத்தில் ஸ்ரீ ஸரஸ்வதீ தேவியிடம் அரங்கேற்ற, அந்த ஸரஸ்வதீதேவி இந்தப் பாஷ்யத்திற்கு ஸ்ரீ பாஷ்ய மென்கிற திரு நாமத்தைப் பிருதமாக அளித்தாள்.

இவ்வாறாக ஸ்ரீ பாஷ்யகாரர் கீதாபாஷ்யம் தீபம் ஸாரம் வேதார்த்த ஸங்க்ரஹம் முதலான ஏழு ப்ரபந்தங்களை அருளிச்செய்து, ஸம்ப்ரதாய ப்ரவசநம் செய்து, ஸ்ரீ பாஞ்சராத்ராகமாநுஸாரமாக ஸ்ரீரங்கம் முதலான அநேக திவ்யதேசங்களில் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்து, நாளதுவரையிலும் 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபி வர்த்ததாம்' என்று எல்லோரும் உத்கோஷிக்கும்படி மஹா கீர்த்தியைப் பெற்றார்.

இப்படி, சேஷாவதாரமான ராமாநுஜன் திருநாராயணபுரத்தில் செல்வப்பிள்ளை துருஷ்கர்களாலே ஆக்ரமிக்கப்பட்டு டில்லியில் அரண்மனையில் இருந்த திவ்யமங்கள விக்ரஹத்தை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து ப்ரதிஷ்டை செய்தது முதலான அமாநுஷமான வ்யாபாரங்களை செய்து இந்த விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்குச் செய்த உபகாரம் வாசாமகோசரம். ராமாநுஜனென்கிற பெரிய தடாகமானது எழுபத்துநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளாகிற பெரிய மதகுகளை ஏற்பாடு செய்து, அவைகள் மூலமாக அந்த மதகுகளை ஆஶ்ரயித்து ஜீவித்திருக்கும் ஜீவராசிகளாகிற பயிர்களுக்கு க்ருபாரூபமான இந்த ஜலத்தை ப்ரவஹிக்கும்படி செய்கிறது. இவ்வாறாக, ஸ்ரீ சடகோபனென்கிற மேகமானது இஜ்ஜீவராசிகளாகிற பயிர்கள் வாடாமலிருந்து, அவைகள் ஐஹிகாமுஷ்மிகமாகிற உபய விபூதிகளையும் அடையும் பொருட்டுப் பயிர்களை ஸேசநம் செய்து ரக்ஷிக்கிறது.

ஸ்ரீ பாஷ்யகாரரால் ஏற்படுத்தப்பட்ட இந்த எழுபத்துநாலு ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய நியமநத்தை முன்னிட்டு 'ஸ்ரீராமாநுஜ ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகாய' என்கிற ஶ்லோகப்படி அத்யக்ஷகராக இருந்து, ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி நவநாரஸிம்ஹ மூர்த்திகளில் ஒரு திவ்யமங்கள விக்ரஹமாகிற மாலோலன் என்கிற விக்ரஹத்தை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, கலியுகத்தில் சேதநர்கள் எம்பெருமானைக் கிட்டித் தாங்கள் எம்பெருமான் இருப்பிடம் வந்து ஸேவிப்பது துர்லபமென்று எண்ணி, அவ்வாறு எண்ணமுள்ளவர்களையும் அதிதயாமூர்த்தி யாகையாலே தான் கரையேற்ற எண்ணங்கொண்டு, அதிபால்யத்திலேயே பகவந் நியமநத்தாலே துரீயாஶ்ரமம் பூண்டு, தேசங்கள்தோறும் க்ராமங்கள்தோறும் க்ரு

ஹங்கள்தோறும் தாம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய் அவர்களுக்கு ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய ஸேவையைச் செய்துவைத்து,* ஸமாஶ்ரயண மந்த்ரோபதேச பரஸ்வீகாராதிகளாலே சேதநோஜ்ஜீவநம் செய்துகொண்டு, மஹா ராஜாதிராஜர்களைத் தம்முடைய ஶிஷ்யர்களாகச் செய்து, அவர்களால் பூஜிக்கப்பட்டு, ஆஸேது ஹிமாசலம் யாத்ரை செய்து, ஆங்காங்கு மஹாராஜர்களாலே ஸமர்ப்பிக்கப்பட்ட பூ தந ஹிரண்யாதிகளைப் பெற்று, அநேக திவ்ய தேசங்களில் ஜீர்ணோத்தாரணம் செய்து, முக்யமாகக் காஞ்சிபுரத்தில் நூற்றுக்கால் மண்டபத்தையும், திருப்பதியில் திருமலைக்கு ஸோபாநமும் ஏற்பாடு செய்து, ஸ்ரீரங்கத்தில் வெள்ளைக் கோபுரத்தையும் கட்டி மஹா ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்தார். அந்வயமநத்தையே அநுஸரித்து இந்த ஸ்ரீமடூஹோபில பீடத்தை அலங்கரித்துவந்த எல்லா ஆசார்யர்களும் ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்ய ஸேவதிகளாயிருந்து சிஷ்யோத்தாரணம் செய்துவந்தார்கள். அந்வயமநத்தையடியொற்றியே ப்ரக்ருதம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகனும் ஆங்காங்குப் பாடசாலைகள்மூலம் வித்யாப்ரசாரம் செய்வித்து, துர்வாதி நிரஸநமும் செய்து, ஸ்ரீ மாலோல ஸதஸ்ஸை ஏற்படுத்தி, அதன்மூலமாகப் பண்டிதர்களை ஸத்கரித்து, பண்டிதபூஷணமாக விளங்கி, சேதநோஜ்ஜீவநம் செய்துவருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதேமாதிரி ஆகல்பம் இந்த ஸதாசார்ய பீடம் வாழ்க-வாழ்க-வாழ்க.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரணஸ்ரீ ஆனிமீ

1உ	புதன்கிழமை	—	மிதுநரவி 13-29. சூந்ய திதி.
2உ	வியாழக்கிழமை	—	சூந்ய திதி.
3உ	வெள்ளிக்கிழமை	—	மிதுந க்ருஷ்ண ஏகாதசி திதி.
4உ	சனிக்கிழமை	—	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி.
7உ	செவ்வாய்க்கிழமை	—	ஸர்வ அமாவாஸ்யை.
17உ	வெள்ளிக்கிழமை	—	தசமீ திதி.
18உ	சனிக்கிழமை	—	ஏகாதஶி திதி ஸ்ரீ பெரியாழ்வார் திருநக்ஷத்ரம்.
19உ	ஞாயிற்றுக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி. த்வாதஶி திதி
20உ	திங்கட்கிழமை	—	த்ரயோதஶி திதி ஸ்ரீமந்நாத முனிகள் திருநக்ஷத்ரம்.
22உ	புதன்கிழமை	—	பூர்ணிமா திதி
30உ	வியாழக்கிழமை	—	மிதுந க்ருஷ்ண அஷ்டமி திதி,
31உ	வெள்ளிக்கிழமை	—	மிதுந க்ருஷ்ண நவமி-தசமி திதித்வயம்.
32உ	சனிக்கிழமை	—	அதிதி: தக்ஷிணாயநம்: கடகரவி: 50-7.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரஸூஹ்ணே நம:

உண்மை வைஷ்ணவன்

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A.,L.T. வித்வான், திருவையாறு]

[ஸம்புடம் 3: ஸஞ்சிகை 5, பக்கம் 152-ன் தொடர்ச்சி]

மந்தாவின் பதி சில நாட்கள் வீட்டுக்கே வருவதில்லை. முதலில் தனிமையாய் வருந்திய மந்தாகினி கால அளவில் இத்துயருக்கு நன்கு பழகிவிட்டாள். ஸந்நிதிக்குச் சென்று திரும்புங்கால் தனக்குப் பரிசித மான ஜாநகியம்மாளைக் கண்டாள். உசித க்ஷேமலாபங்களைப் பேசியான பிறகு, "என்ன மந்தாகினீ! உன் தாயார் என் ப்ராண ஸ்நேஹிதை. நீயும் என் குழந்தைபோல. திருவல்லிக்கேணியில் நாம் கோயிலில் ஸந்திக் கிறோமேயன்றி வேறு இடத்தில் பார்க்கக்கூட ஸந்தர்ப்பம் ஏற்படுகிற தில்லை. நான் ஒன்று சொல்லுகிறேன் கேள்' என்றாள். 'என்ன அம்மா! சொல்லுங்கள்' என்றாள் மந்தா. ஜாநகியம்மாள் (புன்சிரிப்புடன்) "நாளை மதுராந்தகத்தில் ஸ்ரீ கருணாகரப் பெருமாளுக்குக் கருடோத் ஸவமாம். என் பெண்களை அழைத்துக்கொண்டு போவதாயிருக்கிறேன். நீயும் வாயேன்; உத்ஸவம் ஆனவுடன் இங்கே வந்துவிடலாம்" என்றாள். மந்தாகினி வெகு குதூஹலத்துடன் "ரொம்ப ஸந்தோஷமம்மா! இப்படி பகவத் ஸேவைக்கு உபகரிக்கும் பந்துக்களே பந்துக்கள். நீங்கள் போகும்பொழுது ஸித்தமாயிருக்கிறேனம்மா" என்று சொல்லிப் பிரிந் தாள். 'இதுவும் பகவத் க்ருபை' என்று மகிழ்ந்தாள். யாவரும் மதுராந் தகம் சென்றனர். ஸ்டேஷனிலிருந்து இறங்கிச் செல்லும்பொழுதே மந்தாவின் குதூஹலம் சொல்லத் திறமல்ல. திரள்திரளாய் ஸ்ரீவைஷ்ண வரும் மற்ற ஜனங்களும் உத்ஸவத்தை ஸேவிப்பதற்காக விரைந்து செல்லும் ஊக்கத்தைக் கண்டு களித்தாள் மந்தா. ஜாநகியம்மாளும் அவள் பெண்களும் மந்தா விஷயத்தில் அதிக ப்ரீதி காட்டினர். அதனால் அவள் உத்ஸாஹம் பன்மடங்கு அதிகமாயிற்று.

ஸாயங்காலம். ஏரிக்கரையில் மந்தாகினி நின்றுகொண்டு சுற்று முற்றும் பார்த்தாள். பரந்த நீல ஆகாயமும், ஆகாயம்போல் நிறமுள்ள ஸ்வச்சமான சீதள ஜலாவ்ருதமான ஏரியும், வானில் எழுந்த நிறை மதியும் அவள் மனத்தைக் குதூஹலிப்பித்தன. இவ்வளவு ரமணீயமான ஸந்நிவேசத்தில், தான் ஸர்வேஸ்வரனை அநுபவிக்க நேர்ந்ததை எண்ணி அகமகிழ்ந்தாள். வானத்தையும், வானளாவிய ஸ்ரீ கருணாகரனது கோபுரத்தையும் கண்டு களித்தவண்ணம் மந்தா நடந்தாள். "ஹரே வாஸுதேவா! வாஸுதேவா!" என்ற சப்தம் சிறிது தூரத்தில் அவள் காதில் கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினாள் மந்தா. கருணாகரன்

வந்துகொண்டிருந்தார். பனிபோன்ற தூய ஆடை பால் நிலவில் ப்ரகாசிக்க, பொன்னிறமான மேனியில் த்வாதசோர்த்வ புண்ட்ரம் துலங்க, கருணாகரன் எழுந்தருளினர். மந்தாகினி அவரை நமஸ்கரித்து ஆநந்தமும் ஆச்சர்யமும் கொண்டவளாய் நின்றாள். கருணாகரன் "ஸுகமா குழந்தாய்! உன் பதி ஸுகமாயிருக்கிறாரா? திவ்யதேசங்களில் எதிர் பாராமல் இந்தமாதிரி ஸுஹ்ருத்துக்களைக் காண்பது வழக்கமே. ஸந்தோஷம். இங்கு எங்கே தங்கியிருக்கிறாய்?" என்றார். மந்தா எல்லா விவரமும் சொன்னாள். கருணாகரன், "குழந்தாய்! உன் உடம்பில் ஆபரணங்களைக் காணுமே! ப்ரயாணத்திற்காக......." என்று சொல்லு முன்பே மந்தா புன்சிரிப்புடன், "அப்ராப்த காமங்களை ஒழிக்க நாம் முயன்றால் ஆவதில்லை. 'மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்' என்று பாடியருளிய மாதரசியின் அநுக்ரஹத்தால் அவைகளே என்னை விட்டன. தேவரீரும் அடிக்கடி "भर्ता नाम परं स्त्रीणां भूषणं भूषणादपि" என்று ஸாதிப்பதுண்டே. அந்த நிலைமையி லிருக்கிறேன்" என்றாள். கருணாகரனது ஹ்ருதயம் கருணையால் துடித்தது. "ஐயோ! இப்படிப்பட்ட உத்தம வஸ்துவை அநுபவிக்கத் தெரியாமல் ஓர் அநார்யன் துன்புறுத்துகிறானே! ஸ்த்ரீகளை, மலரைக் கையாள்வது போல மென்மையாக ஆளவேண்டு மென்று சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றனவே. இப்படிப்பட்ட தாருண்யத்தில் இவள் கண்களில் என்ன துயரம் போராடுகிறது! உடம்பில் எத்துணைச் சோர்வு! ஐயோ! ஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்த உத்தம வஸ்துவான இவளை இப்படியா நடத்துவான்! "चन्दनं पादुकोपभोगेन दूषितम्" சந்தனக் கட்டையை ஸர்வேஸ்வரனது திவ்ய லேபத்திற்கு உதவப் பயன்படுத்தாமல் பாதுகையாய் உபயோகித்த கதைபோலல்லவோ இருக்கிறது இது. எல்லாம் ஸ்ரீ கருணாகரனின் ஸங்கல்பம்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார். மந்தாகினியும் ஆழ்ந்த யோசனையுடன் பின் சென்றாள். கருணாகரனைக் கண்டது அவள் மனத்திற்குப் பெரும் ஆறுதலாயிருந்தது; பலத்தையும் அளித்தது.

கருணா—வத்ஸே! உன்னுடைய கஷ்டங்களில் மனம் சலித்து என்றாவது பகவதபசாரமாக ஏதேனும் பேசுவையோ?

மந்தா—இல்லை ஸ்வாமி! தேவரீருடன் பழகியதின் காரணமாய் 'ஸ்ரீ வாஸுதேவன் செய்வதெல்லாம் நமது நன்மை ஒன்றன்பொருட்டேயன்றி வேறொன்றிற்கு மில்லை' என்கிற துணிவு வந்துளது. காம க்ரோதங்கள் சில ஸமயங்களில் தங்கள் ஸாம்ராஜ்யத்தில் என்னை மடக்கவே பார்க்கின்றன. ஆயின் என்ன? ஸ்வாமியின் க்ருபை தலை மேல் நின்று தாங்குகிறது. தேவரீர் சொன்ன வார்த்தைகளை என்றும் அடியேன் மறந்ததேயில்லை.

எதிரில் முழங்கால் பர்யந்தம் பட்டு அங்கி அணிந்து, ஒரு பெண்ணை ஒரு கையிற் பிடித்து, மற்றொரு கையில் ஸிகரெட்

தாங்கிய வண்ணம் ஒருவன் எதிரே வந்தான். கருணாகரன் அவனை நெருங்கவும், அவன் 'குப்குப்' என்ற ஒரு புகைப்படலத்தை ஊதிக் கிளப்பினான். "ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண" என்று கருணாகரன் சற்று விலகினார். 'இடி இடி' என்று அந்தப் பெண் சிரிக்க, உடனே ஆடவன் சிரிக்க, இருவரும் மாறி மாறிச் சிரித்தனர். திடீரென்று அந்த ஆடவன் "ஹோ ஹோ ஹோ........மந்தாவா! வந்தி........ருக்கயா? உன் ஸ்நேஹித......ரோடேயா?" என்றான். மந்தா திடுக்கிட்டாள். தன் பதியென்று உணர்ந்தாள். வெட்கத்தால் கூச்ச மடைந்தாள். "அப்படி........ஏரிக் கரை........யி.......லே.......வாக்கிங் (நடைப்பயிற்சி) பண்ணப்பலே,.......இருக்குது. மெட்ராஸை விட்டுட்டு வந்துட்டயா? போ போ....நானும் தமாஷ் பண்றேன்........நீயும் தமாஷ்பண்றே.... ரெண்டுபேரும் சரியாப்பூட்டம்" என்று சொல்லிய வண்ணம் விரைந்து சென்றான். மந்தாகினி ஸ்தம்பித்து நின்றாள். கருணாகரனும் மிக அருவருப்புடன் அவனை நோக்கி நின்றார். மந்தாகினி தன் முகத்தைத் தலைப்பால் மூடிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். இந்த ஸந்தர்ப்பம் காரணமாய்த் தன் புருஷன் என்ன அநர்த்தம் விளைப்பானோ என்று அவள் நடுங்கினாள். கருணாகரனும் இப்படி நிஸ்ஸஹாயமாய்த் துக்கமே நுகரும் அந்தப் பெண்ணினிடம் ஓர் புத்ரி வாத்ஸல்யம் கொண்டு மனம் ததும்பினார். "**विजने विसृष्टा बालेव कन्या विललाप सीता**" என்ற வால்மீகி வாக்யம் அவர் உள்ளத்தில் தோன்றிற்று. "மந்தா! ஸர்வ பந்துவான ஸ்ரீ கருணாகரனிடம் விரைந்து செல்லலாம்" என்றார். மந்தா தழதழத்த குரலுடன் "ஸ்வாமி! இதென்ன துராசாரம்! என்ன பாதகம்! திவ்யதேசத்தில் இப்படிச் செய்வார்களா? வெட்கமற்ற ஒரு பெண்ணைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு பரம பாகவதர்களை மதியாது........" என்றாள். மந்தாகினியைச் சற்றுக் கடுமையாய்ப் பார்த்துக் கருணாகரன் "வத்ஸே! சேதநனுக்குப் பரமபுருஷன் ஸ்வதயாநுக்ருஹீதமான சிறிது ஸ்வாதந்த்ர்யத்தைக் கொடுத்தே இருக்கிறான். ஸ்வரூப ஜ்ஞாநம் மனத்தில் ப்ரகாசிக்காத அவரது செய்வகையை நீ ஏன் நிரூபிக்கவேண்டும்? பிறரது குற்றங்களை விசாரிக்க நாமே ஆரம்பிப்பது, ஸர்வ நியந்தாவின் உந்நதமான கடமையை நம்மேல் ஏறிட்டுக்கொள்ளும் மஹா பாதகத்தைச் செய்வதல்லவா? மதுராந்தகம் உனக்குத் திவ்யதேசம்; ஸ்ரீ கருணாகரனுடைய திவ்ய வாஸஸ்தாநம். உன்புருஷன் மனத்தில் அப்படியே தோன்றும் வரையில் அவரது கார்யங்களை அஸாதுவென்று நிரூபிக்க நீ யார்? அவர் விஷயத்தில் அன்புடன் சொல்வாரில்லை. அவர் மதுராந்தகத்திற்கு வேறு காரணங்களால் வந்திருக்கக்கூடும். நாம் ஏன் இதைப்பற்றிக் கோபப்படவேண்டும்? நீ நாகரிகமான பெண்ணைத் தன் பக்கலில் ஸர்வ வித பரிசர்யை செய்யத் திறமற்றவளாயிருக்கிறாயென்று அவர் உன்னைப்பற்றி வெட்கமும் வருத்தமும் படக்கூடுமல்லவா? வத்ஸே! எல்லாம் வாஸுதேவன் ஸங்கல்பம்" என்றார். மந்தாகினியும் தன் குற்றத்தை உணர்ந்தவளாய்ப் பின் தொடர்ந்தாள்.

சிறிது நேரம் கழித்து, மதுராந்தகத்திற்குத் தன் புருஷன் வந்த காரணத்தைத் தெரிந்துகொண்டாள் மந்தா. எம்பெருமானது உத்ஸவாங்கமாக ஏற்படுத்தப்பட்டிருந்த கேளிக்கைக்கு அன்று அழைக்கப்பட்ட வாராங்கனை அவரது ப்ரிய ஸகி என்றறிந்தாள். அதனாலேயே திவ்யோத்ஸவத்திற்கு அவர் வரும் நிர்ப்பந்தமும் நேர்ந்ததென்று அறிந்துகொண்டாள். ஒருநாள் இரவு மந்தாகினி வழக்கம்போல் படுக்கும் அறைப்புறத்தே அவன் வந்தான். "மந்தா! இக்கடிதத்தைப் பார்" என்று ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அடுத்தபடி "இந்தக் கடிதத்தையும் பார்" என்று மற்றொரு கடிதத்தையும் கொடுத்தான். முதல் கடிதம் யாரோ ஒரு அந்யர் எழுதியது. அதில் கருணாகரனுக்கும் மந்தாகினிக்கும் தகாத நட்பு தொடர்ந்துள்ளதென்றும், இதை உலகு அறிந்திருக்கிறதென்றும், இப்படிப் புருஷன் தன் மனைவி நடக்குமாறு விடக்கூடாதென்றும், உலகத்திற்கே இது ஒரு இழிவென்றும் எழுதியிருந்தது. மற்றொரு கடிதம் மந்தாகினி கருணாகரனுக்கு எழுதியது. கருணாகரன் குணத்தைப் புகழ்ந்தும், அர்ச்சாவதார ஆஸக்தியுள்ள அவர்தான் உத்ஸவங்களை ஸேவிக்க ப்ராப்தரென்றும், அவர் எழுந்தருளாவிடில் காஞ்சி வரதனே திருவுள்ளங் குறைவனென்றும், கடற்கரையில் நிலவில் தனக்குச் செய்த பேருபகாரத்தை என்றும் மறக்க்முடியாதென்றும், அவர் காஞ்சிக்கு அவஶ்யம் எழுந்தருளவேண்டுமென்றும் எழுதியிருந்தது.

பதி—"முதல் கடிதத்தைப்பற்றி என்ன நீ சொல்கிறாய் மந்தா!"

மந்தா.—"அது நான் எழுதினதுமன்று; எனக்கு அதைப்பற்றிச் சிந்தாலேஶமுமில்லை. ஆயினும் பரம பாகவதரான அப்புண்யசீலன் என்னால் களங்கமடைகிறாரே என்ற தாபம்தான் என்னை வாட்டுகிறது" என்றாள்.

இதைக் கேட்டவுடன் அவன் 'இடிஇடி' என்று சிரித்தான். புகைச் சுருட்டை ஒரு தரம் இழுத்துப் புகையை விட்டு அலக்ஷ்யமாய், "ஹூம்! இரண்டாவது கடிதம் நீ எழுதியதுதானே!" என்றான். மந்தாவுக்குக் கோபம் மேலிட்டது. எழுந்த கோபத்தை அடக்கிக்கொண்டு வெகு உறுதியாய் 'ஆமாம்' என்றாள். 'இக்குற்றத்திற்கு உன்னை என்ன செய்யலாம்?' என்று வெகு ஆத்ரமாய்க் கேட்டான். மந்தாகினிக்குத் துயரமும் கோபமும் மேலிட்டன. எல்லையுண்டல்லவா எதற்கும். "என்ன செய்வதா? இப்படிப் பிறர்க்கு வரும் கடிதங்களை அவர் கைக்குச் சேராமலே செய்யும் தூர்த்தர்களை அரசாங்கத்தார் வசம் ஒப்புவித்துத் தண்டித்தல்தான் இப்போது செய்யவேண்டுவது. கருணாகர ஸ்வாமி ஸாதித்தார். எனக்கு ஆச்சரியமாயிருந்தது. என் கடிதம் யாதும் தமக்குக் கிடைக்கவில்லையென்றும், தாம் யத்ருச்சையாகக் காஞ்சிக்கு வந்ததாகவும் அவர் சொன்னார். இந்தக் கடிதத்தை வைத்துக்கொண்டே கரும்பாக்கம் தபால் அதிகாரிகளைத் தண்டிக்க முடியும். கரும்பாக்கத்தில்

இக்கடிதம் அந்த ஸ்வாமியினிடம் சேரவில்லை. இதென்ன அக்ரமம்?" என்றாள். [ராமு புகையை மேன்மேலும் எழுப்பிக்கொண்டே] "மந்தா! நீ அந்த சாமியையே கல்யாணம் செய்துகொண்டிருக்கலாமல்லவா?" என்றான். மந்தாகினிக்கு முகத்தில் அருவருப்பும் கோபக்குறியும் கண்களில் நீர்த்துளிகளும் காணப்பட்டன. ஏதோ பேச வாயெடுத்தவள் நிறுத்திக்கொண்டாள். சுருட்டுப் புகையின் நாற்றம் அவளுக்குத் தலைவேதனையாயிருந்தது. "அந்த சாமியிடம் நீ எல்லையற்ற அன்புகொண்டிருக்கிறாய்" என்றான். மந்தாகினி வீராவேசத்துடன் அவனை நோக்கினாள். "என்ன முறைக்கிறாய்? உங்கள் கதையெல்லாம் உலகறிந்துவிட்டது" என்றான். மந்தாகினிக்கு உடல் நடுங்கியது. "என்னைப்பற்றி நீங்கள் நினைக்கும் அபிப்ராயத்தை நான் ஒரு பொருளாக மதிக்கவில்லை. அந்தப் புண்ய புருஷன்மேல் குற்றம் சொல்ல யான் ஸஹியேன். ஸூர்ய சந்த்ரர்களுக்குக் குற்றம் சொல்லிவிடலாம். ஸ்வப்நத்திலும் அவர்மேல் குற்றம் சொல்ல முடியாது. எத்தகைய தாழ்மையுடையவனும் அவருடைய தூய்மையான உள்ளமுடைமையை மறுக்க முடியுமா? இப்பொழுது இதெல்லாம் என்ன ப்ரஸ்தாவம்? நான் என்ன செய்ய வேண்டும்?" என்றாள். (அவன் சிரித்தவண்ணம்) "மந்தா! என் கண்களை நான் நம்பலாமல்லவா? இருவர் பழகுங்கால், அவருடைய முகபாவம், சேஷ்டைகள், விலாஸங்கள், இவைகளை மடையனும் அறிந்துகொள்ளலாமே. காஞ்சீபுரத்திலும் மதுராந்தகத்திலும் கண்ட காட்சிகளை நான் மறக்க முடியுமா?" என்றான்.

மந்தாகினி வெகு உறுதியுடன் "வேண்டாம். என் மனத்திற் களங்கமில்லை. உங்களிடம் அன்பிற்கும் கடைமைக்கும் என்றும் குறைவு நேர்ந்ததில்லை. இப்படி என்னிடம் அகாரணமாக ஸந்தேஹப்படுவது உங்களுடைய க்ருத்யமல்ல; ஈஶ்வர ஸங்கல்பம். நீங்கள் செய்யும் பரிபவத்தை யெல்லாம் ஸஹித்தேன். இன்னமும் ஸஹிக்கிறேன். நான் தங்களுடைய பத்நி; தங்களுடைய ஆஜ்ஞைக்கு உட்பட்டவளே. என் மனத்திற் களங்கமில்லை. அந்த மஹான் ஓர் உறுதிக்கோட்டை. இவ்வளவே நான் சொல்வது" என்றாள்.

அவள் அளகங்கள், அசைந்து துன்பம் போராடும் நீண்ட கண்களை மறைத்தன. அவன் வெகு உக்ரமாய், "நாளைக் காலையில் நீ இங்கிருக்கக்கூடாது. இது என் கட்டளை. நீயும் நானும் சேர்ந்து வாழ முடியாது. நடவடிக்கை தவறிய நீ ப்ரஷ்டையானாய். உன் தாயிடம் நீ செல்லலாம்" என்றான்.

மந்தாகினி கண்ணீருடன் "தாங்கள் யோசிக்கவேண்டும். அவஸரப்படவேண்டாம். பதியால் கைவிடப்பட்டாளென்று எனக்கு அவதூறு வரும். இப்படியே தங்களிடம் பணிவிடை செய்தவண்ணம் இருக்கிறேன். வெளியே மாத்ரம் போகச் சொல்லவேண்டாம்" என்று குமுறியவண்ணம் நமஸ்கரித்தாள்.

“அடி! மாயக் கள்ளி! இவ்விநய விலாஸங்களெல்லாம் அவனிடம் வைத்துக்கொள். என்னிடம் வேண்டாம். காலையில் ‘க்ளியர் ஔட்’ (வெளியேபோய்விடு)” என்று கர்ஜித்துப்போனான். வாடிய கொடிபோல் மந்தாகினி தரையில் வீழ்ந்தாள். தலைமயிர் அவிழ்ந்து கிடந்தது. கண்களிலிருந்து நீர்த் தாரை பெருகிற்று. அதிக சோகாவேசத்தால் அவள் உடம்பு குலுங்கிக் குலுங்கிப் பதறியது.

“ஹித்வா தந்நஹி நீவ நக்ஷ சோகா வ்யஸநவாரம்வாரயா நிலீயதே நா”

என்ற ஜாநகியின் அவஸ்தையை அடைந்தாள். பிறகு ஒரு தைர்யம் பிறந்தது. தன் தலையைக் கோதி முடிந்துகொண்டாள். தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். “என்ன மடமை! எல்லாம் பகவத் ஸங்கல்பம். ஸர்வஜ்ஞன் செய்வதற்கு நாம் வருந்தி யழுவது மஹாபசார மல்லவா? “‘திவி வா புவி வா மமாஸ்து வாஸோ நரகே வா நரகாந்தக ப்ரகாமம்’ என்றபடி, ஹே தேவாதி ராஜா! ஸ்ரீ பார்த்த ஸஹாய! நின் திவ்ய ஸங்கல்பப்படி நடக்கட்டும். நீ வைத்த நிலைமையில்-நெஞ்சு பதறாத நிலைமையில்-ஒழுகுமாறு அருளவேண்டும். சிஷ்டர்களின் ஸுகத்திற்காக அவதரித்துச் சிசுபாலாதிகளின் எல்லையற்ற பரிபவத்தை ஸஹித்த க்ஷமாநிதியாகிய நீ, துக்கங்களைப் பொறுக்கும் தன்மையை எனக்கு அருளவேண்டும்” என்று வாய் குழறிப் புலம்பினாள். காலையில் வண்டி வந்திருப்பதாயும், உடனே காஞ்சிக்குப் புறப்பட்டுப் போய்விட வேண்டுமென்றும் அவள் புருஷன் சொன்னான். மந்தாகினி கண்ணீருடன் அவனை நமஸ்கரித்து, “சீக்ரம் என்னை அழைத்துக்கொள்ளும்படி ஸ்ரீ பார்த்தஸாரதி அநுக்ரஹிப்பானென்று நம்புகிறேன்” என்று சொல்லி வண்டியிலேறினாள். இரண்டு பெண்கள் ‘இடியிடி’ யென்று சிரிக்கும் சப்தம் கேட்டது.

தன் பெண் இவ்வாறு பதியால் கைவிடப்பட்டுத் தீனையாய்த் திரும்பி வந்ததைக் காண ஜாநகத்துக்குக் கோபமும் ஆக்ரஹமும் அதிகமாயின. உலகத்திலுள்ள சாபமெல்லாம் கொடுத்தாள். அவன்பேரில் மாநநஷ்ட வ்யாஜ்யம் தொடுப்பதாகச் சொன்னாள். மந்தாகினி அவளை மிகவும் ஸமாதாநம் செய்து, “அம்மா! நீ கவலைப்படாதே. எனக்கு விவாஹமாகவில்லை யென்று நினைத்துக்கொள்ளேன்” என்றாள்.

கருணாகரன் இந்த வ்ருத்தாந்தத்தைக் கேட்டு மனம் புழுங்கினார். “ஐயோ மிகவும் உயர்ந்த வஸ்துவாயிற்றே; ஈச்வரன் இப்படி ஸங்கல்பித்துவிட்டானே!” என்று பரிதபித்தார். பவித்ரோத்ஸவத்திற்காகக் கச்சிக்கு வந்திருந்தபோது மந்தாகினியை அவர் மிகவும் ஆச்வாஸித்தார். “அம்மா! ஸ்ரீ வரதன் உனக்குள்ள சிறிது லௌகிக பந்தத்தையும் தீர்த்து, தனக்கே தீர்ந்த அடியவளாய் ஏற்படுத்திக்கொண்டு விட்டான். இதுவும் ஒரு பெரிய நன்மையே என்று நினைத்துக்கொள்” என்றார். மந்தாகினியும் துக்கம் கலந்த புன்சிரிப்புடன், “தாயை நினைந்த கன்றே யொக்கத் தானும் எனக்காகத் தன்னை நினைந்தருளு

மப்பனாகையால், அவனது பரம க்ருபையையே தாரகமாய் நினைத்திருக்கிறேன். திவ்ய ப்ரபந்த ஸேவையும் ஸ்ரீ தேவப்பெருமாளுடைய ஸேவையும் மாறி மாறிக் கிடைக்கப்பெற்றுக் காலம் மதுரமாகவே போகிறது. ஆயினும் குடி கேடிகளின் வசப்பட்ட அவரது ஐஹிக ஆமுஷ்மிகத்தைப்பற்றி யார் கவலைப்படுவார்? ஈஶ்வரன்தான் கடாக்ஷிக்கவேண்டும்'' என்று பரிதாபத்துடன் பதில் கூறினாள். இவளது பதிபக்தியையும் தயையையும் கண்டு கருணாகரன் வியந்தார்.

மந்தாகினி வீட்டுக்கு வந்துவிட்ட இரண்டு மாஸத்திற்கெல்லாம் ஜானகத்தம்மாள் பரமபதம் சேர்ந்தாள். வெகுநாள் தேஹ அஸௌக்யமும் மந்தாவின் துயரமும் அவளை உருக் குலைத்துவிட்டன. கருணாகரன் மந்தாகினியைக் கரும்பாக்கமே வந்து விடும்படி சொன்னார். மந்தாகினி வ்யாகுலத்துடன் “ஸ்வாமி! காஞ்சியில் வஸிப்பது கஷ்டமாய்த் தான் இருக்கிறது. கையில் எதும் பணமில்லை. ஆனால் கரும்பாக்கத்தில் என்னைத் தேவரீருக்குப் பாரமாகவும் களங்கமாகவும்............'' எனக் கருணாகரன் “வத்ஸே! க்ராமவாஸம் ஸௌக்யம். சிக்கனமாய்க் குடித்தனம் செய்வதுடன் உன் பந்துக்கள் என்று சிலரும் அங்கே இருக்கிறார்களல்லவா! மேலும் நான் உன்னைக் கொஞ்சம் கவனித்துக்கொள்ளலாம். என் குழந்தைக்கு இந்தக் கதி வந்தால் நான் விட்டுவிட முடியுமா? உனக்கு அங்கே வீடும் ஸ்வல்பம் பூஸ்திதியும் இருக்கின்றன. அவற்றை வைத்துக்கொண்டு காலந் தள்ளலாம். அங்கேயே வந்துவிடு'' என்றார். மந்தாகினி தனியாய்க் கரும்பாக்கம் வந்து சேர்ந்தாள்.

பாஷ்யம் ஸ்வாமிக்கு ஓயாத வேலை ஏற்பட்டது. மந்தாகினியையும் கருணாகரனையும் மறைவாகவும் ப்ரகாசமாகவும் இழித்துப் பேசவும் திட்டவும் ஆரம்பித்துவிட்டார் அவர். “பள்ளிமுண்டை பக்த வேஷமன்றோ போட ஆரம்பித்துவிட்டாள். இந்தப் பாவிகள் நல்ல கார்யம் செய்தாற்கூட அது பாபத்திலேயே பரிணமிக்கும். ‘उपोषितस्य व्याघ्रस्य पारणं पशुमारणम्' அல்லவா?'' என்றார். கருணாகரனிடம் நிருபாதிகமான த்வேஷம் கொண்டார் பாஷ்யம். ஒரு ஸமயம் மந்தாகினி, க்ராமத்து ஸந்நிதியில் எம்பெருமானுக்கு விசேஷ திருமஞ்ஜநம் செய்வித்துத் தளிகைகளும் ஏற்பாடு செய்திருந்தாள். ஸ்வாமிகளும் ஸ்த்ரீகளும் குழந்தைகளுமாய்ப் பலர் ஸந்நிதியில் கூடி யிருந்தனர். பாஷ்யம் ஸ்வாமி சிஷ்யர்களுடன் அங்கே விஜயம்செய்து கோஷ்டியை அலங்கரித்திருந்தார். கோஷ்டி ஆரம்பித்து ப்ரஸாதங்களைப் பகவானுக்குக் கண்டருளப் பண்ணியவுடன், பாஷ்யம் ஸ்வாமிக்கு அன்று மந்தாகினியின் உபயம் என்று தெரிந்தது. அவர் முகம் கோபத் தீயால் சிவந்தது. “எழுந்திரும் சீமாச்சார்யா! எழுந்திரும் கோபாலாச்சார்யா! இந்தப் பாஷண்டியின உபயமென்று எனக்குத் தெரியாது பூட்டுதே. இந்த பக்த சிரோமணியைக் கருணாகராச்சார், எம்பெருமான் வரையில் ஏற்றிப் பார்க்கிறாப் போல் இருக்கிறது. இந்த நித்ய ஸூரியின் ஸம்பந்தம் வந்தால்தான் எம்பெருமானுக்கும் ஸாந்நித்யம்'' என்று சொல்லித் தளுவத்தை உதறிக்கொண்டு எழுந்தார். சிஷ்யர்களும் மற்றும் அநேகரும் எழுந்துவிட்டனர். குழந்தைகளும் சில ஸ்த்ரீகளும் கருணாகரனுமே அங்கு உட்கார்ந்திருந்தனர். கருணாகரன் மந்தாகினிக்கு ஆறுதல் கூறிக் கோஷ்டியை முடித்தார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வங்கீபுரம் காருகுரிச்சி வித்வான் ஸ்ரீ. உ. வே. வேங்கட வரதாசார்ய ஸ்வாமி

[ஸ்ரீ. உப. வங்கீபுரம் காருகுரிச்சி ஸ்ரீ ஸுந்தரராஜாசார்யர், பி.ஏ.,எல்.டி..]

வங்கீபுரம் காருகுருச்சி வித்வான் ஸ்ரீ. உப. வேங்கடவரதாசார்ய ஸ்வாமி, இந்த ஸுபாநு தைமீ 25௳ (7-2-1944) திங்கட்கிழமையன்று பரமபதித்து விட்டார், இந்த ஸ்வாமி பாரத்வாஜ கோத்ரோத்பவர்; வங்கீபுரத்து நம்பிகளின் திருவம்சத்தைச் சேர்ந்தவர். இந்த ஸ்வாமியின் திருவம்சத்தார் நான்கு தலைமுறைக்குமேல் ஸ்ரீ பாஷ்யாதிகாரிகளாகவும், ஸம்ப்ரதாய க்ரந்தங்களை ப்ரவசநம் செய்யும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருந்துவந்தார்கள்.

இந்த ஸ்வாமியின் பிதாமஹரின் திருத்தகப்பனார் ஸ்ரீ வேங்கட க்ருஷ்ணமாசார்யர் என்பவர். அவர் பரமைகாந்தி ஸார்வபௌமர். இந்த ஸ்வாமிக்கு ஸ்ரீ அஹோபிலமட திவ்யாஸ்தாநத்தில் 25-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹா தேசிகனிடத்தில் ஸகல அந்வயம். இந்த ஸ்வாமி ஸந்நிதியில் காலக்ஷேபம் செய்து நல்ல ஞானம் ஸம்பாதித்தவர்கள் அநேகர். இந்த ஸ்வாமியின் திருக் குமாரர்களில் மூத்தவர்தான் ஸ்ரீ வேங்கட வரதாசார்ய ஸ்வாமி. .இந்த ஸ்வாமியின் ஆத்மகுண பூர்த்திக்கு அளவே இல்லை. நல்ல உபசாந்தர்; அத்யந்தம் பயந்த ஸ்வபாவமுள்ளவர்; ம்ருது பாஷி; நிஸ்ஸ்ப்ருஹர்; நல்ல அநுஷ்டாதா; ரயில் ஏறினது கிடையாது; பாதசாரியாகத் திவ்ய தேச யாத்ரையை நடத்தினவர்; ஔபாஸந வைச்வதேவம் பண்ணாத நாள் கிடையாது; பூர்ணமாய் அத்யயநம் செய்தவர்; இரண்டு ஸூத்ரங்களிலும் தக்க ஆதாரத்துடன் பூர்வாபரம் பண்ணிவைக்கும் சக்தி வாய்ந்தவர். இந்த ஸ்வாமியின் திவ்ய கடாக்ஷத்தினால் அநேக திருநாமங்கள் நல்ல ஞானவான்களாக ஆயிருக்கிறார்கள். 40-வது பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரையும், 41-வது பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கரையும், இந்த ஸ்வாமியினிடம் காலக்ஷேபம் செய்து ஞானம் ஸம்பாதித்தவர்களில் முக்யமானவர்களாகக் கூறலாம். இந்த ஸ்வாமியின் ஜ்யேஷ்ட திருக் குமாரர்தான் நம் ஸ்ரீ அழகிய சிங்கர் [40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தாய் எழுந்தருளியிருந்த மஹான்]. ஸ்ரீ அழகிய சிங்கரின் ஏக புத்ரர்தான் காலஞ்சென்ற நம்முடைய ஸ்ரீ உ. வே. வேங்கட வரதாசார்ய ஸ்வாமி. ஸ்ரீ ஸ்வாமி,

பவ ௵ பங்குனி மாஸம் 25ம் தேதி செவ்வாய்க்கிழமை அமாவாஸ்யை யும் ரேவதி நக்ஷத்ரமும் கூடிய சுபதிநத்தில் மேஷ லக்நத்தில் திரு அவ தாரம் செய்தவர்.

“ [illegible] ”

என்னும்படியான ப்ரஶஸ்தியுடன் கூடினவராக இந்த ஸ்வாமி விளங் கினர். துளஸி பரிமளத்துடன் அங்குரிக்குமாப்போலே, கருங்காலி வைரத்துடன் உண்டாகுமாப்போலே, இந்த ஸ்வாமியும் பால்யம் தொடங்கி நம்மாழ்வார் மாதிரி ஐஹிக விஷயங்களில் அதிக பற்றுதல் இல்லாமலும், ஜ்ஞாந ஸம்பாதநத்தில் அத்யந்தம் ஆசையுடனும் விளங்கி வந்தார். இந்த ஸ்வாமிக்கு ஸ்ரீ அஹோபில மட திவ்யா ஸ்தாநத்தில் 36-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹா தேசிகன் திவ்ய ஸந்நிதியில் பஞ்ச ஸம்ஸ்காரம். 40-வது பட்டத்து ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதியில் க்ரந்த காலக்ஷேபமும் ஆத்ம ரக்ஷாபர ஸமர்ப்பண மும். இந்த ஸ்வாமி ஒருநாளும் தேஹ தார்ட்யத்துடன் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருந்தும் கர்மாநுஷ்டாநத்தை விடாமல் தள் ளாத திருமேனியுடன் செய்துவந்தார். இந்த ஸ்வாமியின் திருமேனி யின் ஸௌஷ்டவம் மிகவும் அழகானது. திருமேனி அழகுக்குத் தகுந் தபடி வாங் மதுர்யமும் மிகவும் அதிகம். அத்யுக்தியும் பருஷ வார்த் தைகளும் ஒருநாளும் அவர் திருவாக்கில் வந்ததே கிடையாது.

ஸ்வாமி, தம் திருமேனியின் ஶ்ரமத்தை ஈஷத்துக் கூட கவனி யாமல், தம்முடைய மந்த்ர பலத்தை உபயோகித்து அநேக திவ்ய தேசங் களில் சென்று, அங்கே அங்கே உள்ள திவ்யமங்கள விக்ரஹங்களுக்குத் திருப்ரதிஷ்டை செய்து வைத்துள்ளார். ஸ்ரீ ஸந்நிதி ப்ரதிஷ்டா விதி களில் நம் ஸ்வாமி இட்டது சட்டம். நல்ல பூர்ண அதிகாரி. ஸ்ரீ அஹோபிலத்தில் நள வருஷம் ஆவணிமீ நடந்த திருப்ரதிஷ்டையில் அதிகம் ஊக்கம் எடுத்துக்கொண்டு அதை அழகாய் நடத்திவைத்த உத்தம புருஷன் நம் ஸ்ரீ ஸ்வாமியே. அதே மாதிரி கத்தவால் கோபால்பேட்டை முதலிய இடங்களிலும், ஸ்ரீஸ்வாமி எழுந்தருளி அழகாகத் திருப்ரதிஷ்டை செய்தருளியிருக்கிறர். மந்த்ர சக்தி மிகவும் அதிகம். அநேக பகவந் மந்த்ரங்களில் ஸித்திபெற்ற மஹான். ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ மதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன், ஸ்ரீ ஷஷ்ட பராங்குச யதீந்த்ர மஹா தேசிகன், ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹா தேசிகன், ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன், ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் முதலிய மஹான்களின் அநுஷ்டாநத்தை அடியொற்றி, அநேக ஜீவராசிகளைத் தமது தீர்த்த பலத்தால் உஜ்ஜீவிக்கப் பண்ணிய உத்தம புருஷன். அநேக திருநாமங்களுக்கு மந்த்ரோபதேசம், ஸ்ரீ

பாஷ்யாதி க்ரந்த காலக்ஷேபங்கள், வைஶ்வதேவம், எல்லாம் செய்து வைத்துத் தாம் ஸம்பாதித்த ஞானத்தைப் பிறர்க்கு உபகரிப்பதே தமது பிறவிக்கு உயர்ந்த ப்ரயோஜநம் என்று திருவுள்ளம் பற்றின மஹான். ஆத்மகுண பூர்த்தி மிகவும் அதிகம். மநஸ் வாக் காயம் மூன்றும் ஒன்றுபட்டுக் கார்யங்களை நடத்துபவர். அஸூயையினாலும் அஹங்காரத்தினாலும் தம்மைப் பரிபவப் படுத்தினாலுங்கூட அவர்களுக்காகவும் தாம் நோவுபடும் ஸ்வபாவ முள்ளவர். "ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே" என்கிற ஶ்லோகத்தில் விஸ்தரித்துள்ள ஆசார்ய லக்ஷணங்களுடன் கூடியவர் ஸ்ரீ ஸ்வாமி என்று சொல்வது அதிஶயோக்தி ஆகாது. தம் திருமேனியில் ஸ்வல்ப நோய் சாத்திக்கொண்டவாறே, குடும்ப பரணத்திற்குத் தம் தர்மபத்நியிடம் சில ஆப்த தமர்களைக் கூட வைத்துக் கொண்டு வேண்டிய லௌகிக ஏற்பாடுகளையும், பகவதாராதநம் அவிச்சிந்நமாய் நடப்பதற்காகவும், திருவம்ஶத்தின் அபிவ்ருத்தியை உத்தேசித்து ஒரு பையனை ஸ்வீகாரமும் செய்ய ஏற்பாடும் செய்துவிட்டு, தம் அவதாரத்தின் ஸமாபநத்தைச் செய்து கொண்டார். ஸ்ரீ ஸ்வாமியின் தேஜஸ்ஸுக்கும் பெருமைக்கும் ஞானத்திற்கும் தக்கபடி உத்தர க்ரியைகள் பெரிய மடாதிபதிகளுக்கு நடக்கும் வண்ணம் மிகவும் செவ்வனே செய்யப்பட்டன. குலம் நாதனை இழந்தது; அக்ரஹாரம் சோபையை இழந்தது; தர்ம சாஸ்த்ரமும் மந்த்ர சாஸ்த்ரமும் ப்ரவர்த்தகரை இழந்தன. சுமார் 150-வருஷகாலமாய் வைதிக கார்யங்களுக்கெல்லாம் இருப்பிடமாயிருந்த திருமாளிகை தத்காலம் நாதனற்றுப் போயிற்று. இந்த ஸ்வாமியின் சரம ஶ்லோகங்கள், ஸ்ரீ ஸ்வாமியின் கல்யாண குணங்களை ஒருவாறு வர்ணிக்கின்றன வாகையினால், அவைகள் இங்கே வரையப்பட்டுள்ளன.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

க்ஷீணேப்தே ஸாஹஸாநாம் ஷண்ணவதி ஶகாநாம் ராஶௌ ஸிம்ஹாஹ்வயே ஶே
பக்ஷே ஶுக்லாக்ஷிதித்யாம் ஶஶியுதிவஸே நாகதாராஸமேதே ।
பாரத்வாஜகாந்வயே ஶ்ரேணிரிவ ஸ்ரீவேங்கடார்யோ வரேண்ய:
ப்ராயாத் ப்ரஹ்மம் ஶிகாரிப்ரபவயதிவரப்ரேக்ஷிதோ ஶ்ரீந்ருஸிம்ஹம் ॥

ஸாஹஸ்ரே பாவஶாப்தே தபஸி ஶுக்லே வியோகதிநே ।
பாரத்வாஜோ வேங்கடார்யோ வரதோ மாத்ருராவது ॥

ஸ்ரீ ஶ்வேதாஶ்வதரே ப்ரியவிஹ்வாஸ்வதாதிபாதராஜா
ப்ரஹ்மாதோ ஶத்ருநாஜப்ரஹ்மாவதுஜநாத்தளஶிகோ ஶம்த்ருஸிம்ஹ: ।
நாஶ்ரீதாதஹஸ்த்ரீ வரதமாராஸஹ வேங்கடார்யோ விதக்ஷ்ணி:
பாஷ்யாதிமந்த்ரஸாரப்ரவசநபடுவாக்ப்ராவ லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேஶிகாய நம:

* உந்தி பறத்தல்

[ஸ்ரீமதி கல்யாணி அம்மாள், சைதாப்பேட்டை]

[பெரியாழ்வார் பெரும்பாலும் ஸ்ரீ க்ருஷ்ணவதார குண சேஷ்டிதங்களிலே ஈடுபட்டு அதிலே மண்டியிருப்பர். அவ்வீடுபாட்டின் பரீவாஹமாக அவ்வாழ்வார் (திருப்பல்லாண்டு உட்பட) 473-பாசுரங்கள் அருளிச் செய்துள்ளார். [திருப்பல்லாண்டைத் தவிர்த்து] அவை பெரியாழ்வார் திருமொழி யெனப்படும். தமிழில் தொண்ணூற்றாறு வகை ப்ரபந்தங்களுள் அவை பிள்ளைத் தமிழைச் சேர்ந்த தென்பர். கீழே மூன்று பத்துக்களில் ஸ்ரீ க்ருஷ்ணவதார குண சேஷ்டிதங்களையே பாடிவந்த இவ்வாழ்வார், இத்திருமொழியில் [3-ம் பத்து 9-ம் திருமொழி] அந்த க்ருஷ்ணவதாரத்தோடு ராமாவதார குண சேஷ்டிதங்களையும் உடன் அநுபவிக்க விரும்பி, க்ருஷ்ணவதார குண சேஷ்டிதங்களைச் சொல்பவள் ஒருத்தியும், ராமாவதார குண சேஷ்டிதங்களைச் சொல்பவள் ஒருத்தியுமாக இரண்டு பெண்கள் ஒருவர்க் கொருவர் எதிர்நின்று பேசி உந்தி பறப்பதாக, இவ்விரண்டு அவதார குண சேஷ்டிதங்களையும் ஒரே திருமொழியில் அருளிச்செய்கிறார். இப்பதிகத்தின் ரஸவிஶேஷங்கள் யாவையும் பரக்க அநுபவித்துப் பேச எளியேற்கு வல்லமையில்லை. ஆசார்யாநுக்ரஹத்தால் ஏதோ தெரிந்தவரையில் பெண்களும் பேதைகளும் படித்துணருமாறு எளிய பேச்சு நடையில் இவ்யாஸம் எழுதலானேன். இந்த ஸாஹஸத்தைப் பெரியோர் க்ஷமித்தருள்க.]

மதுரவாணி—அடி பத்மாவதீ! ஒரு ஸமயம் நரகாஸுரன் என்றவன் தேவலோகத்துக்குப் போய்த் தேவதைகளையெல்லாம் ஹிம்ஸை பண்ணிண்டிருந்தான். அப்போ அவாளெல்லாம் எங்க க்ருஷ்ணனண்டை வந்து அந்தக் கஷ்டத்தைச் சொல்லி முறையிட்டுண்டா. அப்போ எங்க க்ருஷ்ணன் தன் அகமுடையாள் ஸத்யபாமையையும் அழைச்சுண்டு கருடன்மேலே ஏறிண்டு அந்த அஸுரனுடைய ஊர்க்கு [ப்ராக்ஜோதிஷபுரம்] போய், அவனைத் தன் சக்ராயுதத்தினால் கொன்னொழிச்சு தேவதைகளைக் காப்பாத்தினான். அதனாலே இந்திரனும் மத்த தேவர்களும் ரொம்ப ஸந்தோஷப்பட்டா. அப்போ ஸத்யபாமை அந்த லோகத்திலிருக்கிற பாரிஜாத புஷ்பம் தனக்கு வேணும்னு ஆசைப்பட்டு, வெக்கத்தை விட்டு—வாயைத் திறந்து—நேரில் இந்திராணியை கேட்டா. 'இத்தனை பெரிய மனுஷி வாயை திறந்து கேட்டாளே'ன்னாவது அவள் கொடுத்திருக்கலாம். அல்லது, 'நம் கஷ்டங்களை யெல்லாம் நீக்கி நமக்கு நல்லதைப் பண்ணாளே, அதுக்குப் பதிலுபகாரமாக இருக்கட்டும்' என்னாவது கொடுத்திருக்கலாம். இரண்டுமில்லை. அதோடு விடலை அவள். "ஏண்டி! நீ மனுஷப் பெண்தானே! உனக்குத் தகாதடி இது. எங்களைப்போலிருக்கிற தெய்வப் பெண்களுக்குத்தாண்டி தகும். நீ இதன் மேலே ஆசை வெச்சதே பிசகாச்சே. போ; ரொம்ப அழகுதான்" என்னு நெட்டாகச் சொல்லி அனுப்பிச்சுட்டா. அப்போ பாமா ரொம்ப வெக்கப்பட்டுண்டு இத்தை தன் ஆமடியானிடத்திலே ரொம்ப வருத்தமா சொல்லிண்டா. அப்போ எங்க க்ருஷ்ணன் என்ன செய்தான் தெரியுமோ?

---

* உந்தி பறத்தலாவது—தனது தலைவன் குணவெற்றிகளை வாயால் புகழ்ந்து பாடிக்கொண்டு உயர வெழுந்து குதித்த லென்பர்.

அந்த பாரிஜாத மரத்தை வேரோடே பிடுங்கினன். அதை அந்த கருடன் தலேமேலே வைச்சுக் கொணந்து ஸத்யபாமை வீட்லே நட்டுட்டான். எப்படியிருக்கு எங்க க்ருஷ்ணன் பராக்ரமம் பார். அவன் குணத்தைச் சொல்லிப் பாடடி.

1. [என்னதன் தேவிக்கன் றின்பப்பூ வீயாதாள்
தன்னதன் காணவே தண்பூ மரத்தினே
வன்னதப் புள்ளால் வலியப் பறித்திட்ட
என்னதன் வன்மையைப் பாடிப்பற
எம்பிரான் வன்மையைப் பாடிப்பற.]

பத்மாவதி :—அடீ மதுரவாணி! அது கிடக்கடீ. இதைக் கேள். எங்க ராமன் மிதிலேலே வில்லே ஒடிச்சு ஸீதையை கல்யாணம் பண்ணிண்டானன்னே? அந்த கோலத்தோடே அயோத்திக்கு வந்துண்டிருந்தான். வர வழியிலே பரசுராமன் என்றவன் வந்து வழியை மடக்கி "அடே ராமா! நீ சிவவில்லே ஒடிச்சு கல்யாணம் பண்ணிண்டுட்டதாக கர்வப்படாதேடா. ஏற்கெனவே அது ஒருதரம் (ஹரிஹர யுத்தத்தில்) ஒடிஞ்சு போய் பூண்கட்டி வைச்சிண்டிருந்த சொத்தை வில்லடா அது. அதை ஒடிச்சுட்டதாக பெருமை யடிச்சுக்காதே. நான் வைச்சிண்டிருக்கேனே இந்த வில்லே ஒடிச்சுட்டு அந்தண்டை போ. இல்லாவிட்டா உன்னே ஊர்க்குப் போகவிடமாட்டேன்" என்னு வீரவாதம் பேசினன். அப்போ எங்க ராமன் என்ன பண்ணினன் தெரியுமோ? மஹா வீரனன்னே அவன்? அந்த வில்லேக் கையிலே வாங்கிண்டான். லேசாக வளேச்சான். நாணேத்தினன். அம்பைத் தொடுத்தான். "அடே! என் அம்புக்கு வழி சொல்லு. உன் உயிரை வாங்கிட்டிருப்பேன். நீ பிராமணன். உன்னே கொல்றத்துக்கில்லே. ஒன்னு சொல்றேன் கேள். 'நினேச்ச இடத்துக்கு போறது' என்ற சக்தி ஒன்னு வைச்சிண்டிருக்கையே அதை ஒழிக்கட்டுமா? அல்லது உன் தபஸ்ஸை ஒழிச்சுடட்டுமா? சொல் சீக்ரம்" என்னன். அப்போ பரசுராமன் அசந்துபோய் ஒன்னும் சொல்ல முடியாமல், தன் தபோபலம் எல்லாத்தையும் அர்ப்பணம் பண்ணிட்டான். வெத்தாளா நிக்கருன். அப்போ எங்க ராமன் தன் பாணத்துக்கு அதைக் குறியாக்கி அவனேக் காப்பாத்திவிட்டான். பார்த்தையா எங்க ராமன் மஹிமையை—வில்லின் பலத்தை. இன்னும் கேள். தாடகை என்னு ஒரு ராக்ஷஸி. அவள் காட்டிலே ரிஷிகளேயும் யாகங்களேயும் தபஸ்ஸையும் அழிச்சுண்டு ரொம்ப உபத்ரவம் பண்ணிண்டு வந்தா. அவளே விசுவாமித்ரர் சொல்லால் ஒரே பாணத்தாலே ஒழிச்சு, அவாளுக்கு ரொம்ப ஸௌகர்யத்தைப் பண்ணி வச்சான். எங்க ராமன் தோள் வலி வில் வலி குருபக்தி தயை—இதை யெல்லாம் சொல்லிப் பாடடீ. வாய் படைச்ச பயன் உண்டாகும்.

[2. என்வில் வலிகண்டு போவென் றெதிர்வந்தான்
தன்வில்லி னேடுந் தவத்தை யெதிர்வாங்கி
முன்வில் வலித்து முதுபெண் ணுயிருண்டான்
தன்வில்லின் வன்மையைப் பாடிப்பற
தாசரதி தன்மையைப் பாடிப்பற.]

மதுரவாணி :— கேளடி எங்க க்ருஷ்ணன் பெருமையை. எங்க க்ருஷ்ணன் உங்க ராமன்லே குறைஞ்சவன்னு நினேச்சிண்டிருக்

கையோ? ருக்மிணியை அவ அப்பா சேதி தேசத்து ராஜா சிசுபாலனுக்கு கொடுக்கிறதுன்னு கோடிச்சுண்டு தயாரா யிருந்தாராம். அது அவளுக்குப் பிடிக்கலே. கண்ணனைக் கல்யாணம் பண்ணிக்கணம்னு இவள் எண்ணம். இந்த சேதியை கண்ணனுக்குத் தெரிவிச்சா. உடனே கண்ணன் தேரை ஓட்டிண்டுபோய் திடீர்னு ருக்மிணியைத் தூக்கி தேர்லே வைச்சிண்டு த்வாரகைக்கு வந்திண்டிருந்தான். இந்த ஸங்கதியை தெரிஞ்சிண்டு அவ தமையன் ருக்மி என்றவன் ஓடிவந்து க்ருஷ்ணனோடு சண்டைபோட்டு அவனைக் கொண்டுபோய்டணம்னு பார்த்தான். க்ருஷ்ணன் லேசிலே விட்டுடுவனா? வந்துட்டது கோபம். கொன்னுடலாம்னு பார்த்தான். அவனைக் கொன்னுட்டா ருக்மிணிக்கு தான் மனஸுக்கு கஷ்டமாயிருக்கும் என்னு நினைச்சு, அவனைத் தேர்க்கால்லே கட்டி தலையை சிரைச்சு அவமானம் பண்ணி 'ஐயோ பாவம்'னு உயிரோடு அனுப்பிச்சுட்டான். பார்த்தையா எங்க கண்ணன் ஸௌலப்யத்தையும் குணத்தையும் பலத்தையும். அவனைப் பாடுவோம் வா.

[3· உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக் கொண்டு
விருப்புற்றங் கேக விரைந்தெதிர் வந்து
செருக்குற்றான் வீரஞ் சிதையத் தலையைச்
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற—
தேவகி சிங்கத்தைப் பாடிப்பற.]

பத்மாவதி :—சரிதாண்டீ, நிறுத்து. ஆழுடையாள் தாக்ஷிண்யத்துக்குக் கட்டுப்பட்டு மச்சினனைக் கொல்லாமல் விட்டுட்டதை ஒரு பெருமையாகச் சொல்லிண்டு குதிக்கிறே. எங்க ராமன் ஸௌலப்யத்தையும் குணத்தையும் சொல்றேன் கேளு. அசந்து போய்டுவே. ராமன் கைகேயி உத்தரவிட்டதன் பேர்லே காட்டுக்குப் போனான்னு கேள்விப்பட்டிருப்பையே. அப்போ ஸுமித்ரை—பெத்த தாய் வேறு இவள் வேறில்லே. அவ ராமனைக் கூப்பிட்டு, "அப்பா! ராமா! ஒத்தி என் பிள்ளைக்கு வேணும்னு கேட்டு வாங்கிண்ட ராஜ்யம் உனக்கு வேண்டாமடா. ஒத்தரும் அபிமானிக்காத காடே உனக்கு சரி. நீ காட்டுக்கே போ" என்னு சொன்னா. பெத்த தாய் இருக்காளே கௌஸல்யை, "அப்பா! உன்னைப் பிரிஞ்சு எப்படியடா யிருப்பேன்!" என்னு ரொம்ப வருத்தப்பட்டு அழுதா. இன்னொரு யமன் இருக்காளே—[அவ பேரை சொல்றத்துக்குக்கூட பிடிக்கலே]—கைகேயி—தசரதன் கட்டளைன்னு சொல்லி ராமனை காட்டுக்கு அனுப்பிட்டா. ராமன் இவ வார்த்தையை கேட்டுண்டு உடனே காட்டுக்கும் போய்ட்டான். ஆஹா! என்ன குணம் பாரு. "கட்டின காப்போடு காட்லே தள்ளிட்டா பாவி; அம்மாவா அவ; யமனன்னோ?" என்னிப்படி ஏதாவது வசானோ? அல்லது மனஸிலே தான் எண்ணினானோ? இல்லவே இல்லே. கொஞ்சம்கூட கோபமே கிடையாது. ஆநந்தமாகக் காட்டுக்குப் போனான். என்ன காரணம் தெரியுமா? அவன் ஸீதை ஆழுடையானுக்கும். இப்படி யாராவது கைக்குவர ஸொத்தை விட்டுட்டு, அப்பா அம்மா சொல்றாளேன்னு, காட்டுக்குப் போய்க் கஷ்டப்படறவாள் உண்டா? இதன்னோ ஸௌலப்ய குணம்? இவன் குணத்துக்குமேற்பட்ட குணமும் உண்டா உலகத்திலே? இவனன்னோ மனஸ்ஸுக்கு இனியவன். அவனுடைய குணாநுபவத்தைப் பண்ணுவோம் வா.

[4. மாற்றுத்தாய் சென்று வனம்போகே யென்றிட
ஈற்றுத்தாய் பின்தொடர்ந் தெம்பிரா னென்றழ
கூற்றுத்தாய் சொல்லக் கொடிய வனம்போன
சீற்ற மிலாதானைப் பாடிப்பற சீதை மணாளனைப் பாடிப்பற.]

[குறிப்பு :—இப் பாசுரத்தில் மாற்றுத் தாய், ஈற்றுத் தாய், கூற்றுத் தாய் என்று மூன்று சொற்கள் வந்துள்ளன. இவற்றுள் மாற்றுத் தாய் ஸுமித்ரையையும், ஈற்றுத் தாய் கௌஸல்யையும், கூற்றுத் தாய் கைகேயியையும் குறிக்குமெனக் கொள்க. அப்போது மாற்றுத் தாய் என்பதற்கு, "இராம பிரானது மற்றொரு தாய்" என்பது பொருளாகும். ஸுமித்ரையார் பெருமானைப் பார்த்து "நீ காட்டுக்குச் செல்" என்று சொல்வதாக ஸ்ரீமத் ராமாயணத்தில் இல்லையாயினும், இவ் வாழ்வார் அருளிச் செய்திருப்பதற்குக் காரணம் இதிஹாஸ புராணாந்தரங்களிலும் கல்பாந்தரங்களிலும் உண்டென்று கொள்ள வேணும் என்று ஆன்றோர் கூறுவர். அன்றி, மாற்றுத் தாய் கூற்றுத் தாய் எனும் சொற்றொடர்களில், மாற்றுத்தாய் கைகேயியைக் குறிக்குமெனக் கொண்டால், கூற்றுத் தாய் ஸுமித்ரையாரைக் குறிக்கும். அப்போது, கூற்றுத் தாய் என்பதற்கு, இரண்டு புத்ரர்களின் உற்பத்திக்குக் காரணமான இரண்டு (பாயஸக்) கூறுகளைப் பெற்ற தாய் என்று பொருள் கொள்ளவேணும்.]

மதுரவாணி :—பாண்டவாள் ராஜ்யத்தை துரியோதனன் பொறாமையினால் சூதாடி பிடுங்கிண்டுட்டான். தவிர 14 வருஷம் அவாளை காட்டுக்கும் ஓட்டிட்டான். அந்த 14 வருஷம் ஆனதும் பாண்டவாள் திரும்பிவந்து அநேக பேரை அனுப்பி தங்கள் ராஜ்யத்தை கேட்டா. அவன் ஊசி நாட்ற இடங்கூட கொடுக்கமாட்டேனுட்டான். கடைசியா 'தெய்வமே'ன்னு, எங்க க்ருஷ்ணனுக்கம் தூதுபோய்த் துரியோதனனண்டை படாத பாடெல்லாம் பட்டான். என்ன தலையில் எழுத்துடீ! இதிலே ஒன்னு கேள். உங்க ராமன் ரொம்ப ஸுலபன்னு சொல்றே. ஒத்துக்கிறேன். ஆனா அவன் நாதனா மாத்ரம் தான் இருந்தான். இந்த மாதிரி தூதனா போகலே. எங்க க்ருஷ்ணன் நாதனாயிருந்து தூதனாயும் போனான். அதிலும் 'தீதிலாத தூதன்'. இதிலிருந்து உனக்கு என்ன தெரியறது? 'பத்துடை யடிவர்க்கு எளியன்' என்னு தெரியலே! இன்னும் சொல்றேன் கேள். யமுனா நதியில் ஒரு மடு. அதில் காளியன்னு ஒரு நாகம் விஷத்தை கக்கி ஜலம் மொத்தத்தையும் விஷமா அடிச்சுட்டது. அதை தண்டிக்கணம்னு நினைச்சு எங்க க்ருஷ்ணன் அந்த மடுவில் குதிச்சான். அந்த பாம்பைப் பிடிச்சு அதன் படத்திலே ஏறித் தொகைச்சு நர்த்தனம் பண்ணுன். உயிர் போகும்போ லிருந்தது அதுக்கு. அப்போ நாக கன்னிகைகள் வந்து தங்களுக்கு மாங்கல்ய பிக்ஷை தரவேணும்னு ரொம்ப கேட்டுண்டா. அவா கேட்டுண்டபடி அந்த காளியனை எங்க க்ருஷ்ணன் உயிரோடு விட்டுட்டான். பாத்துண்டையா எங்க க்ருஷ்ணன் குணத்தை—செயலே—ஸௌலப்யத்தை. அவனைப் பாடுவோம் வா.

[5. பஞ்சவர் தூதனாய்ப் பாரதங் கைசெய்து
நஞ்சுமிழ் நாகங் கிடந்தநற் பொய்கைபுக்(கு)
அஞ்சப் பணத்தின்மேற் பாய்ந்திட் டருள்செய்த
அஞ்சன வண்ணனைப் பாடிப்பற
யசோதைதன் சிங்கத்தைப் பாடிப்பற.]

[தொடரும்]

॥ श्रीः ॥

॥ श्रीमते श्रीलक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः ॥

"शबरी"

[ஆத்வரீ ஸ்ரீ. உப. ஆர் க்ருஷ்ணமாசார்யர் மதுராந்தகம்]

1-4-44-ல் சென்னையில் நடந்த வால்மீகி திருத்தன்று பரிசு பெற்றது.

महद्भिस्संपूर्णे महितधिषणैर्मद्रनगरे
समिन्धाना सैषा समितिरनघा संस्कृतरुचिः ।
प्रचेतोऽपत्यस्य प्रभवदिवसं चेत्प्रथयते
कथं वा संसारः कथय सुधियामप्रियकरः ॥ १ ॥

रहस्यार्थैराढ्ये सुविदितमिदं रामचरिते
मतङ्गारण्यं तत्किमपि महिमैकास्पदमिति ।
तपस्यन्ती कापि श्रमबहुलमत्र श्रमणिका
स्थिता जातु श्रीशो नयनविषयस्स्यादिति धिया ॥ २ ॥

वहन्ती पूजायै कुसुमनिवहन्तीव्रतपसा
मुदासीना देहेऽप्यतिथिषु मुदासीदभिगता ।
दयामय्या दृष्टा मृगसमुदयामन्दमनघा
ससन्ताद्विद्वेषं जहुरिह समं तादृगरिभिः ॥ ३ ॥

महर्षीणामङ्घ्र्योस्स्वकृतपरिचर्याफलतया
प्रपेदे सा भक्तिं भगवति तथा ब्रह्मविदुषी ।
यथास्वादं स्वादं फलतरुषु सश्रद्धमनघा
फलं विष्णोः प्रीत्यै प्रतिदिवसमेवं समचिनोत् ॥ ४ ॥

असौ शान्ताप्यन्या दशरथसुतायाः सहजया
श्रिया युक्ता नापि क्षुभितजलधेरुत्थितवती ।
अजस्रं सन्मार्गस्थितिरपि मतंगाश्रमगता
कलापूर्णाप्यासीदनिशमकळंका च शबरी ॥ ५ ॥

तपश्चर्याविशादनिशमुपवासव्यसनिनां
महर्षीणामङ्गेष्वधिकमनुकम्प्यात्र कृशता ।
अमीषां शिष्यत्वादपि गुणगणा यत्प्रणयिनो
विघृण्वन्त्युत्कर्षं विदधति तथा विस्मयमपि ॥ ६ ॥

तपस्सिद्धयै यस्याः स्थितिरिह वने सिद्धमहिते
वगाहस्सर्वेष्वप्यसकृदिह तीर्थेषु सुलभः ।
उदन्वन्तस्सप्त स्वयमुपगताद्यत्र विषये
विरक्तानां तत्किं वद जगति यद्दुर्लभमिह ॥ ७ ॥

क्व साकेतस्थित्या निखिलजगतो रक्षणपरः
क्व च स्त्री स्वातन्त्र्यादनधिकृतकर्मा शबरिका ।
तथाप्येनां रामस्स्वयमुपससर्प श्रमणिकां
गुणाः पूजास्थानं गुणिषु न च लिङ्गं न च वयः ॥ ८ ॥

अयं चान्यः कश्चिद्विलसति विशेषश्शृणुत भोः
यदासीत्पूर्वेषामपि किल गुरूणामसुलभम् ।
तदप्यस्यै साक्षाद्रघुकुलपतिर्दर्शनमदात्
फले भाग्यायत्ते न हि किमपि वस्तु प्रभवति ॥ ९ ॥

मुमुक्षूणामन्त्यस्सरणमपि गोविन्दविषयं
निदानं मोक्षस्येत्यभिदधति सर्वे श्रुतिविदः ।
तदेषा तद्रीत्या रघुपतिमनुस्मृत्य जुहवां
चकार स्वं देहं हुतवहमुखे तस्य पुरतः ॥ १० ॥

निषेव्य श्रीरामं सपदि शरभङ्गो हुतवपुः
कृपालब्धं सोऽपि क्वचन फलमेकोनुबुभुजे ।
न भुञ्जीत स्वादु स्वयमिति धिया किंचन फलं
समर्प्य श्रीरामे पदममृतमध्यास्त शबरी ॥ ११ ॥

पुरा श्रीरामेणाप्युपकृतिविदा संस्कृततनोः
क्रमेण स्वर्गादीनधिगतवतो लोकनिचयान् ।
जटायोरप्राप्तामलभत विमुक्तिन्तु शबरी
महर्षीणां सेवा जयति भुवि दुर्ज्ञानविभवा ॥ १२ ॥

प्रकृति महतामाचार्याणामुपासनया दृढा
भवति भगवद्भक्तिस्तस्यास्ततस्तदनुग्रहः
वितरति सतामन्ते मुक्तिं य एव विरागिणा
मिति हि शबरीवृत्त्या प्राचीकशन्निजया नृणाम् ॥ १३ ॥

ஸ்ரீ:
ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

---

(1)

கண்கொடுத்தவணிதத்தில் உத்ஸவம்

[கண்கொடுத்தவணிதம் ஸ்ரீ ஸந்நிதி முத்ரைக் கர்த்தா கிடாம்பி ஸ்ரீ. உப. ஆத்ரேய க. வா. ஸ்ரீ. கோபாலதேசிகாசாரியர்]

"உன்னித்து மற்றொரு தெய்வந்தொழா ளவனையல்லால்
நும்மிச்சை சொல்லிநும் தோள்குலைக்கப்படு மன்னைமீர்
மன்னப்படு மறைவாணனை வண்துவராபதி
மன்னனை யேத்துமி னேத்துதலும் தொழுதாடுமே."

என்று குருகேசன் அருளியபடி, ஸ்ரீலக்ஷ்மீபதி யானவன் மதுரா நகரத்தில் தர்ம ஸம்ரக்ஷணார்த்தம் ஆவிர்ப்பவித்து அநேக லீலாவிபவங்களைச் செய்து, ஸௌலப்யாதி குணங்களை வெளிப்படுத்தி, அக்காலத்தில் அவைகளை அநுபவிக்கப்பெறாத அஸ்மதாதிகளுக்கு க்ருபை புரியுமாறு அர்ச்சாரூபியாய்ப் பல விடங்களில் ஸேவை ஸாதிக்கிறான். அவைகளுள் அவ்வெம்பெருமான், ஸ்ரீ சம்பகாரண்ய க்ஷேத்ரத்திற்கும் ஸ்ரீ க்ருஷ்ண மங்கள க்ஷேத்ரத்திற்கும் மத்தியில், "வாணீவப்ராச்வத்ததீரே ஹேமாப்ஜஸரஸஸ்தடே | நந்த்யக்ஷோபாக்ஷேத்ரே ஸர்வபாபஹரே ஶுபே" என்னும் மத்ய சம்பகாரண்ய க்ஷேத்ரத்தில் ஒரு கலாப காலத்தில் திருக்குடந்தை திவ்யதேசத் தெம்பெருமானாகிய ஸ்ரீ ஆராவமுதாழ்வானுக்கு ஸம்ரக்ஷகமாயிருந்த ஹேமாப்ஜ புஷ்கரிணீ யென்னும் பொற்றாமரைக் கரையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி ஸேவை ஸாதிக்கிற ஸ்ரீருக்மிணீ ஸத்யபாமா ஹேமாப்ஜ நாயிகா ஸமேத ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி ஸந்நிதியில், ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்ரீவண் ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்னும் ஸ்வாமியினால் அர்ச்சா ரூபியாய் எழுந்தருளப்பண்ணித் திருப்ரதிஷ்டை செய்து மங்களாசாஸநம் செய்யப்பட்ட திவ்யமங்கள மூர்த்தியான ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுக்கும், ஷை ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமி ஸந்நிதியில் ஆழ்வார் ஆசார்ய கோஷ்டியில் மேற்கு முகமாகவும் அஞ்சலி ஹஸ்தராகவும் வீற்றிருந்த திருக்கோலமாகவும் த்ரிதண்டத்துடன் மூலஸ்தாந விக்ரஹமாய் எழுந்தருளி ஸேவை ஸாதிக்கிற ஸ்ரீ அஹோபில மட ஸ்தாபகாசார்யருமான ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுக்கும், நாளது தாரண வருஷ சித்திரை மீ 25௳ ஞாயிற்றுக்கிழமை (7—5—1944) காலையில் விசேஷமான திருமஞ்சநங்களும் ஈரவாடைத் தளிகையும் ஸமர்ப்பிக்கப்பட்டன. அன்றைதினம் ஸாயங்காலம் அவதார காலத்தில் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை மஹா மண்டபத்தில் திவ்ய ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளப் பண்ணுவித்து, உயர்ந்த பட்டுக்களாலும் கிரீடம் முதலான ஆபரணாதிகளாலும் புஷ்பங்களாலும் அலங்காரஞ் செய்து தளிகைகளும் ஸமர்ப்பிக்கப்பட்டன. வழக்கப்படி ஸ்ரீ அழகியசிங்கர் மரியாதை முதலானவைகள், ஸ்ரீ முகத்தின் திவ்ய நியமநப்படி மிகவும் அழகாக நடந்தேறின. மண்டபத்தில் ஸ்ரீ ஸந்நிதி ப்ரபந்தம் முதலானவை ஸேவை பண்ணப்பட்டன. திருவாராதநம் ஆனவுடன் ஓஹோரைகளும் தளிகையும் ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹனும் ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ரமஹா தேசிகனும், 'பனியரும் புதிருமாலோ என்செய்கேன்' என்று அருளியபடி, பரம பாமரர்களுக்கும் ஆநந்தபாஷ்பம் உண்டாகும்படி திருவாழி திருச்சங்குகளுடன் ஆநந்தமாய் ஸேவைஸாதித்தருளினர்.

அநந்தரம் சாற்றுமறை யானவுடன், ஸ்ரீஸந்நிதி வாழித் திருநாமங்களுடன் கோஷ்டியும், ஸ்தோத்ரஜாலத்துடன் விநியோகங்களும் நடந்தேறின. ஷை யூரில்

எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஶ்ரேயார்த்திகளான நம் ஸ்ரீவைஷ்ணவ சிரோமணிகள், பரமபக்தியுடன் ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஜயந்தி உத்ஸவத்தில் ஸந்தோஷத்துடன் தங்களா லியன்ற பொருளுதவி செய்துவைத்ததை அடியேன் மறப்பதற்கில்லை. இதே ப்ரகாரம் ப்ரதிவருஷமும் ஸ்ரீ சிங்கப்பிரான் அவதார வைபவம் நடந்துகொண்டுவரும்படி, அனைத்துலகுமுடைய அரவிந்தலோசனனை ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கிறேன்.

---

(2)

தூசியில் உத்ஸவம்

[சேட்லூர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸராகவாசார்யர், காஞ்சீபுரம்]

ப்ரதி சித்திரை மாஸத்திலும் சித்ரா பூர்ணிமா தினத்தில் பெருமாள் கோயில் ஸ்ரீ தேவராஜ ஸ்வாமி, தண்டிகைப் பல்லக்கில் ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி ப்ரதிஷ்டாக்ரஹாரமான ஶடகோபபுரம் எனப்படும் தூசி அக்ரஹாரத்துக்கு எழுந்தருளி, அவ்வக்ரஹாரத்திலுள்ள ஸ்ரீவைகுண்டப்பெருமாள் ஸந்நிதியில் மண்டவப்படியாகி எழுந்தருளியிருந்து, அவ்விடத்தில் படியமுது செய்து, வேதபாராயணம் கோஷ்டி விநியோகம் முதலானவைகள் ஆகி, ஆழ்வார்கள், உடையவர், ஸ்ரீ தேசிகன், ஸ்ரீ ஆதிவண் சடகோப ஸ்வாமி, இவர்களுக்குக் கட்டியம் சத்ர சாமர திருச்சிந்ந ஸஹிதம் மாலை ஸ்ரீ சடகோபம் முதலான ஸகல மரியாதைகள் நடந்து, பிறகு உபயகாரர்களுக்கும் ஷை கிராம எல்லா ஐயங்கார்களுக்கும் ஷை உத்ஸவத்தில் வ்யாஜ்யத்தில் வாதிகளுமான பிராமணர்கள் எல்லோருக்கும் மாலை மரியாதைகள் நடப்பது வழக்கம். பிறகு அக்ரஹார வீதிப்ரமணம் எழுந்தருளி, கர்ப்பூர ஹாரத்தி உபஹாரம் ஸமர்ப்பிக்கப்பட்டு, அய்யங்கார் குளம் கிராமத்திற்கு எழுந்தருளுவது வழக்கம். தவிர: மேல்கண்ட பிரகாரம் நடத்துவதில் டிக்ரிபெற்ற உத்ஸவம் இது. இந்த உத்ஸவம் 1884 வருஷத்தில் ஆரம்பம். இவ்வருஷம் (அதாவது: தாரண ஹூ) சித்திரைமீ 26உ (8—5—1944) திங்கட்கிழமை மாலை வழக்கம்போல் ஷை உத்ஸவம் அதிவிமர்சையாக நடந்தது. இதில் நூறுவது வருஷம் ஸ்ரீதேவராஜன் அநுக்ரஹத்தால் உத்ஸவம் அதிவிமர்சையாக மேல்கண்ட மரியாதைகள் அக்ரஹார வீதிவலங்கள் நிர்விக்நமாய் நடந்தன. இதேமாதிரி இனிமேலும் ஸம்வத்ஸரங்கள்தோறும் ஸம்பூர்ணமாய் உத்ஸவம் கண்டருளி அடியோங்களை உஜ்ஜீவிப்பிக்க வேணுமாய், ஸ்ரீ பெருந்தேவிநாயிகா ஸமேத ஸ்ரீதேவராஜ ஸ்வாமியையும், ஸ்ரீ அழகியசிங்கரையும் தண்டன் ஸமர்ப்பித்து ப்ரார்த்திக்கிறோம்.

---

(3)

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிக ஸபை, டேங்கணிக்கோட்டை

[ஸ்ரீ உப. கே. வேங்கடாசார்ய ஸ்வாமி, டெங்கணிக்கோட்டை]

ஸ்ரீ வரத ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் அவதார ஸ்தலமாகிய டெங்கணிக்கோட்டையில் 1943-ம் ஹூ ஸ்தாபிக்கப்பட்டது ஸ்ரீ வேதாந்த தேசிக மஹா ஸபை.

டெங்கணிக்கோட்டையில் ஜன்மித்து ஆஶ்ரமம் பெற்று, விசேஷ சிஷ்யர்களுடன் ஸேவை ஸாதித்தருளிவந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ வரத ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகன் திருவுள்ளம் உகந்தருளி ஸ்தாபிக்கப்பட்ட ஸபை இது. இந்த ஸபையின் 1942, 1943 வருஷங்களின் வரவு செலவு கணக்கு அச்சிடப்பட்டு, ஸ்ரீதேசிகன் திருவடி ஸம்பந்திகளுக்கும், தேசிக ஸபைக்கு மெம்பர்களாக விரும்பும் ஸ்வாமிகளுக்கும், மற்றும் ஆசார்யன் திருவடியை ஆசிரயிப்பவர்களுக்கும் அறிவிக்கப்படும். 1943—1944-ம் வருஷங்களுக்குச் சந்தா வசூல் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது.

1944-ம் வருஷம் புரட்டாசிமாதம் 13ம் தேதிக்குச் சரியான 28—9—1944 ல் நடைபெறும் ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருநக்ஷத்ரத்திற்கு, 10 நாள் முன்னிருந்து ப்ரதி தினம் ஸேவை சாத்துமறையும், கடைசி மூன்று நாட்களில் காலக்ஷேபமும் அலங்கார ததியாராதனையும் வித்வத் பரீக்ஷையும் நடைபெறும்.

(4)
ப்ரஹ்மவித்யாதிகாரம்

[வித்வான் மதுராந்தகம் ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, திருவையாறு]

"திவ்ய ப்ரபந்தாத்யயநமும் ப்ரஹ்ம வித்யாதிகாரமும்" என்கிற குறிப்பின் கீழ் ஸ்ரீ ஸம்பாதக ஸ்வாமியின் சில சங்கைகள் சென்ற மாதத்து ஸஞ்சிகையில் ப்ரசுரமாயிருக்கின்றன. அவற்றிற்கு ஸமாதாநத்தை இந்த வ்யாஸத்தின் மூலம் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறேன்.

1. ‖ திவ்யப்ரபந்தமும் வேதோபப்ருஹ்மணமே ‖

எங்ஙனே என்னில்:—"பராங்குச பரகாலாதி ரூபத்தாலே அபிநவமாக வொரு தசாவதாரம் பண்ணி......வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையாலே ஸங்க்ரஹித்துக் காட்டி" என்று பெரிய ரஹஸ்யத்திலே ஆசார்யன் ஸ்ரீஸூக்தி யுள்ளது. "அந்தமிலா வாரணங்கள் நாலாய் நின்ற அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து, செந்தமிழா லருள்செய்த வகை" என்பதாக ப்ரபந்த ஸாரத்தில் பணிப்பு. "மிக்கவேதியர் வேதத்தின் உட்பொருள், நிற்கப் பாடி என்நெஞ்சுள் நிறுத்தினன், தக்கசீர்ச் சடகோபன்" என்றும், "எய்தற் கரிய மறைகளை, ஆயிர மின்தமிழால் செய்தற் குலகில்வரும் சடகோபன்" என்றும், இவ்வாறுன ஸம்ப்ரதிபந்ந ஸம்ப்ரதாயோக்திகளால் திவ்யப்ரபந்தம் வேதோப்ருஹ்மணம் என்பது ஸ்ரீவைஷ்ணவர் ஒருவராலும் மறுக்கவொண்ணாத விஷயம். ஆகவே, இதிஹாஸ புராணங்கள் உபாஸநத்திற்கு ஸ்வதந்த்ரோபாயங்க ளாகமாட்டா என்பதாக அபசூத்ராதிகரணத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்திருப்பது திவ்ய ப்ரபந்தத்திற்கும் துல்யமானதே.

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திகளிலும், ஆசார்யஹ்ருதயம் முதலியவற்றிலும், திவ்ய ப்ரபந்தம் (திருவாய்மொழி) வேதத்திற்கு ஸம மென்றும், வேத மென்றும், வேதத்திற்கு மேற்பட்டதென்றும் வாக்யங்கள் காணப்படுகின்றன. வேதம் ஸர்வப்ரமாண மூர்த்தந்யமென்று கொண்டே இவ்வாசார்ய வாக்யங்கள் இவ்வாறு புகழ்ந்திருப்பதாலும், உபப்ருஹ்மண மென்பதையும் அவ்வாக்யங்களே தெளிவாக்குகின்றமையாலும் இதை ஸ்வதந்த்ர ப்ரமாணமாக்க முடியாது.

அபசூத்ராதிகரண ச்ருதப்ரகாசிகையில் "மூலமாகிய வேதஜ்ஞாந மில்லாதவனுக்கு வ்யாக்யாந மாத்ரத்தினால் உபாஸநத்திற்கு வேண்டிய ஜ்ஞாநம் புஷ்கலமாக மாட்டா. ஆகவே வேதாத்யயந மில்லாதவனுக்கு உபாஸநோபயுக்த ஜ்ஞாந வைசத்யமாகிற த்ருஷ்ட ஸாமர்த்யமில்லை. அதோடு வேதத்திற்கு அங்கமாக விதித்த உபப்ருஹ்மணத்தை ஸ்வதந்த்ர மாக்கினால், புஸ்தக பாடத்தினால் பெற்ற வேதார்த்த ஜ்ஞாநம்போல் அந்த ஜ்ஞாநம் சாஸ்த்ர விருத்தமாகையால் சாஸ்த்ராநுமத யோக்யதையாகிற அத்ருஷ்ட ஸாமர்த்யமுமில்லை" என்னும் கருத்துள்ள வாக்யங்கள் இருக்கின்றன. ஆகவே "செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று அதிகார ஸங்க்ரஹாரம்பத்தில் ஆசார்யன் வேதோபப்ருஹ்மணமாகக் கொண்ட ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை ஸ்வதந்த்ரோபாயமாகக் கொள்ளில், முற்கூறியபடி உபாஸநத்திற்கு வேண்டிய த்ருஷ்ட ஸாமர்த்யமோ அத்ருஷ்ட ஸாமர்த்யமோ ஏற்படமாட்டாது.

மேலும், "ஒரு ப்ராஹ்மணன் தனக்கு ப்ராஹ்மண்யம் இருக்கையிலும், வேதாத்யயநத்தில் ப்ரவர்த்திக்காதவனுய்த் திவ்யப்ரபந்த மூலம் பூர்ண ஜ்ஞாநம் பெற்றால் அது உபாஸநத்திற்கு உபாயமாகுமா?" என்பதாக நம் ஸ்வாமியின் முதல் சங்கை. ஜாதி ப்ராஹ்மண்ய மிருந்தாலும் குணக்ருத ப்ராஹ்மண்யம் இவனுக்குக் கிடையாதே. இவனை வ்ராத்ய னென்றும் அநதிகாரியாகவு மன்றோ சாஸ்த்ரம் காட்டுகிறது. ஆகவே, 'வ்ருஷளத்வம் வாராமைக்காக ப்ராஹ்மணன் பூர்ணாத்யயநம் செய்யவேண்டும். சக்யமில்லாவிடில் ஏகதேசத்தையாவது அத்யயநம் செய்தல் வேண்டும்' என்பது பராசர ஸம்ஹிதை. அதன்படி ஏகதேசமாவது அத்யயநம் செய்ய வேண்டும். இதுவு மில்லாத ப்ராஹ்மணனுக்கு அத்ருஷ்ட ஸாமர்த்யம் இவ்வழியிலும் கிடையாது.

ஆக: இவ்வளவினால் வேதாத்யயநமாகிற அத்ருஷ்ட ஸாமர்த்யமும், அங்கத்தை ஸ்வதந்த்ர மாக்கியதால் சாஸ்த்ராநுமதியாகிற அத்ருஷ்ட ஸாமர்த்யமும், உபாஸநோபயுக்த பூர்ணஜ்ஞாந ஸம்பத்தியாகிற த்ருஷ்ட ஸாமர்த்யமும் இராமை

யால், வேதாத்யயந மில்லாத ப்ராஹ்மணன் கேவலம் திவ்யப்ரபந்தத்தால் ஏற்பட்ட ஜ்ஞாநத்தை ஸ்வதந்த்ரோபாயமாகக் கருதி உபாஸநம் செய்வது கூடாது என்பதாக முதல் சங்கைக்கு ஸமாதாநம்.

2. இனி, "திவ்யப்ரபந்தத்தை அத்யயநம் செய்தல் வேண்டும் என்று விதி இருக்கின்றதா?" என்பது இரண்டாவது ஆசங்கை.

"स्वाध्यायोऽध्येतव्यः" என்கிற விதியே த்ராவிட வேதத்திற்கும் பொதுவானது என்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஸ்ரீ பிள்ளை லோகம் ஜீயர் பெயரால் ப்ரசுரமாயிருக்கும் 'ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்' என்கிற க்ரந்தத்தில் இந்த பக்ஷத்தைக் காணலாம். "अध्येतव्यं प्रयत्नेन वेदरूपमिदंसदा" இத்யாதியான சில ப்ரமாணங்களும் அந்த க்ரந்தத்திலேயே உதாஹ்ருதங்களா யிருக்கின்றன. நிற்க: "धर्मज्ञसमयः प्रमाणं" என்கிற ஆபஸ்தம்ப வசநத்தின்படி ஸம்ப்ரதாயாசார்யோக்தியே நமக்குப் போதுமானது. "செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய வோதி" என்று வேதத்தைப்போல் அத்யயநம் இதற்கும் வேண்டுமென்று ஸ்ரீதேசிகன் அதிகார ஸங்க்ரஹாரம்பத்தில் அருளிச்செய்திருக்கிறார். எம்பெருமானார், "திருமாலையாண்டான் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழி கேட்டார்; ஆளவந்தார், ஆழ்வார் ஸ்ரீபாதத்திலே திருவாய்மொழி ஓதினார்" என்றும், "அறியக் கற்று வல்லார் வைட்டணவர்" என்றும், ஆசார்யனும் ஆழ்வாரும் இதை அத்யயநம் செய்யும்படி உக்தியாலும் அநுஷ்டாநத்தாலும் காட்டியிருப்பதனாலும், இதை ஓதல்வேண்டும் என்று ஏற்படுகிறது. வேதாத்யயநாதி முகத்தால் ப்ராஹ்மண்யம் ஸித்திப்பதுபோல், திவ்யப்ரபந்தாத்யயநத்தால் வைஷ்ணவத்வ ஸித்தி என்பதாக ஆசார்ய ஹ்ருதயத்திலேயும் பங்க்திகள் காணப்படுகின்றன. ஆகவே ஸ்ரீவைஷ்ணவனுக்கு திவ்யப்ரபந்தாத்யயநம் அவஶ்யம் வேண்டும் என்று இரண்டாம் ஆசங்கைக்குப் பரிஹாரம்.

3. ‖ சூத்ரர்களுக்கு ப்ரஹ்மோபாஸநம் ‖

'திவ்யப்ரபந்தமானது வேதம்போல் ஸ்வதந்த்ரோபாய மன்று; பாரதாதிகளைப் போல் வேத பரதந்த்ரமாகவே உபாயம் என்பதை முன்பே நிரூபித்துள்ளேன். இனி 'திவ்யப்ரபந்தத்தின் வழியாக சூத்ரர்களுக்கும் ப்ரஹ்மோபாஸநத்தில் அதிகாரம் ப்ரஸங்கிக்குமே; அபசூத்ராதிகரண விருத்தமன்றோ அது?' என்பதாக மூன்று மாசங்கையும் அதனாலேயே தத்தோத்தரம். ஆகிலும் உள்ள அறிவைக்கொண்டு ஸ்வயம் ப்ரயோஜநமாகவோ பரம்பரையாக மோக்ஷோபகாரகத்வ புத்தியினாலோ சூத்ராதிகளும் தாந்த்ரிக உபாஸநம் செய்யலாம். அதில் அபசூத்ராதிகரண விரோத மில்லை. வைதிகோபாஸநத்திலே சூத்ராதிகள் அநதிகாரிகள் என்பதையே அவ்வதிகரணம் நிரூபிக்கின்றது.

[குறிப்பு :—இதற்கு மேல் ஸ்ரீமதுராந்தகம் ஸ்வாமி, ஶூத்ராதிகளுக்குத் தாந்த்ரிகோபாஸநத்தில் அதிகார முண்டு என்பதைப் பஹு ப்ரமாணங்களைக் கொண்டு நிரூபிக்கிறார். அவகாஶம் மிதமாக இருப்பதால் அதை ப்ரசுரம் செய்வது ஸாத்யமாக இல்லை என்பதைப்பற்றி ஶோகிக்கிறோம். மேலும், ப்ரஹ்ம வித்யாதிகாரத்தைப்பற்றியே ப்ரக்ருத ஶங்கை. ப்ரஹ்மவித்யை என்பது வைதிக உபாஸநத்தையே குறிக்குமாதலால், தாந்த்ரிக உபாஸநத்தைப்பற்றிய விசாரத்திற்கு இவ்விடத்தில் உத்திதியே இல்லை.] ஸ்ரீ. ந்ரு. ப்ரியா ஸம்பாதகர்.

---

(5)

40-வது பட்டத்து ஸ்ரீ அழகியசிங்கரின் உத்ஸவம்

ஸ்ரீ அஹோபிலமட திவ்யாஸ்தாநத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீவண் ஶட கோப ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் உத்ஸவம், துவரிமான் ப்ருந்தாவநத்தில், ஆனிமீ 10-உ வெள்ளிக்கிழமையன்று, இதாநீம் 42-வது பட்டம் ஸ்ரீஅழகிய சிங்கரின் திவ்ய நியமநத்தின்பேரில் உபக்ரமிக்கப்பட்டுப் பத்து நாட்களாய் நடைபெறும்.

காருகுரிச்சி
28—5—44

கே. டி. ஸுந்தரராஜாசார்யர்.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

“ योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ ”

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸஞ்சாரம்

மூன்று வர்ஷகாலமாகப் பற்பல விடங்களில் ஸஞ்சரித்துக் கொண்டிருந்த சிங்கவேழ் குன்றுடையான், ஸமீப காலத்தில் ஸ்ரீரங்கத்தை விட்டுப் புறப்பட்டு, திரிசிராப்பள்ளி ஜில்லா மேல் பாகத்திலும், சேலம் ஜில்லாவின் கீழ்ப் பாகத்திலுள்ள வேலூர் நாமக்கல் ராசிபுரம் முதலிய ஸ்தலங்களையும் அலங்கரித்து விட்டு, பிறகு சேலம் நகரத்திற்கு எழுந்தருளி, அவ்விடத்தில் ஐந்தாறு தினங்கள் தங்கி, இப்பொழுது வைகுண்டம் குமாரபாளையம் மார்க்கமாய்ப் பவானியை அடைந்திருப்பதாக அறிகின்றோம்: பவானியில் பத்துத் தினங்கள் எழுந்தருளியிருக்கலாம். ஸ்ரீ களத்தூர் ஸ்வாமி திருநக்ஷத்ரம் அவ்விடத்தில் நடைபெறும்.

‘லோகநாதனுக இருக்கும் ஸ்ரீஸரண்யன் ஏன் இவ்விதம் தேஸாத் தேஸம் அலையவேண்டும்?’ என்று சிலர் நினைக்கலாம். அவன் அலையாமல் வேறு எவன் இவ்விதம் அலையவேண்டும்? ‘விவித விநத பூத வ்ராத ரக்ஷைக தீக்ஷ’னன்றோ அவன்? ஆஸ்ரிதர்களுடைய ரக்ஷணம் மாத்ரமின்றிக்கே, அவர்களுடைய ஸம்பந்திகளின் ரக்ஷணத்தையும் தனது ப்ரதான ஸங்கல்பமாகக் கொண்டிருக்கிறானன்றோ? “अप्यहं जीवितं जह्याम्” என்று சொன்னவன் தனது ஸத்தையைப் பெரிதாக நினைப்பனே? அவன் அந்வேஷ்டவ்யனே; ஆனாலும் ஆஸ்ரிதர்களை அந்வேஷித்து அலையும் ஸீலம் அவனுடையது. அஹோ! என்ன வைலக்ஷண்யம்?

“ कोऽयं गुणः कतरकोटिगतः कियान्वा
कस्य स्तुतेः पदमहो वद कस्य भूमिः ॥ ”

*　　　　*　　　　*　　　　*

ராஜாங்கத்தாரின் தர்ம சிந்தை

சென்ற மாஸத்தில் பம்பாய் நகரத்துக்குத் தீயினால் விளைந்த விபத்தைப் பற்றி நாம் ஏற்கெனவே நமது பத்ரிகையில் ப்ரஸ்தாவித்திருந்தோம். அது ஸம்பந்தமாக இப்பொழுது ஒரு ஸந்தோஷகரமான ஸமாசாரம் நமக்குக் கிடைத்திருக்கின்றது. அதை ஸந்தோஷத்துடன் வெளியிடுகின்றோம். மஹா கநம் பொருந்திய நமது வைஸ்ராய் [ராஜ ப்ரதிநிதியான பெரியகவர்

னர்] சில நாட்களுக்கு முன்னர் தீப்பிடித்த ஸ்தலங்களை நேரில் போய்ப் பார்வையிட்டாராம். அவ்விடத்தில் ஜநங்களுக்கு நேர்ந்த கஷ்டத்தை உணர்ந்து, அதைப்பற்றித் தமது ஹார்த்தமான ஶோகத்தை மிக்க பரிதாபத்துடன் தெரிவித்தாராம். இது அவருடைய உயர்ந்த நற்குணத்தை வெளியிடுகின்றது. இப்பொழுது அந்த ப்ரபு, ஜநங்களுக்கு நேர்ந்துள்ள த்ரவ்ய நஷ்டத்தில் முக்கால் பாகத்தை ஸர்க்கார் ஏற்றுக்கொள்வார்களென்று ஒரு விளம்பரம் வெளியிட்டிருக்கிறாராம் இது உண்மையான கருணையின் கார்யமே. இதைக் கேட்ட நமக்கு,

"येन येन वियुज्यन्ते प्रजाः स्निग्धेन बन्धुना ।
स स पापादृते तासां दुष्यन्त इति घुष्यताम् ॥"

என்று அக்காலத்தில் துஷ்யந்த மஹாராஜனால் செய்விக்கப்பட்ட உத்கோஷம் ஜ்ஞாபகத்திற்கு வருகின்றது. அம்மாதிரியான தர்ம சிந்தை இக்காலத்திலும் நடையாடுகின்றது என்பதை அறிய நாம் ஸந்தோஷிக்கிறோம். மநு சொல்லுகிறபடி, தர்மிஷ்டனை அரசனின் பரமமான தர்மம் ப்ரஜைகளின் பரிபாலநமே. ப்ரஜைகள் ஸம்ரக்ஷிக்கப்பட்டால் அரசன் அநாயாஸமாகவே மேன்மை அடைகின்றானன்றோ?

"सुसङ्गृहीतराष्ट्रो हि पार्थिवस्सुखमेधते"

அந்த க்ஷேமம் நமது ராஜாங்கத்தாருக்கும் ஸம்பவிக்குமென்பது நமது நம்பிக்கை.

* * * *

ஸர்வ வ்யாக்யாந அதிகரணத்தில் ஒரு ஶங்கை

ப்ரஹ்ம ஸூத்ரத்தின் முதல் அத்யாயத்திற்கு ஸமந்வயாத்யாயமென்று பெயர். அந்த அத்யாயத்தின் விஷயம் என்னவென்றால் :—ஜகத்காரணத்தைச் சொல்லும் ஸகல வேதாந்த வாக்யங்களும் 'ஸர்வஜ்ஞத்வம் ஸத்ய ஸங்கல்பத்வம் முதலிய கல்யாண குணங்களுடன் கூடிய ப்ரஹ்மமே ஜகத்காரண வஸ்து' என்று சொல்லுகின்றன என்பதை ஸ்தாபிப்பதுதான். இந்த அத்யாயத்தில் மொத்தம் 35 அதிகரணங்கள். முதல் பாகத்தின் முதல் ஸூத்ரத்திற்கும், அந்தப் பாதம் நாலாவது ஸூத்ரமாகிற ஸமந்வய ஸூத்ரத்திற்கும், ஸித்தமான பரப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கும் வேதாந்த வாக்யங்கள் விஷயங்கள். மற்ற 33 அதிகரணங்களுள், கடைசி அதிகரணமான ஸர்வ வ்யாக்யாநாதிகரணம் நீங்கலாக, பாக்கி 32 அதிகரணங்களுக்கும் வேறு சிற்சில காரண வாதி வாக்ய விஶேஷங்கள் விஷயங்கள். இப்படி 34 அதிகரணங்களால் அநேக வாக்யங்களை விசாரித்துவிட்டு, ஸ்ரீ ஸூத்ரக்காரர், 35-வது அதிகரணமாகிற 'ஸர்வ வ்யாக்யாநாதிகரணம்' என்னும் கடைசி அதிகரணத்தில் 'முதல் 34 அதிகரணங்களால் ஸித்திக்கும் ந்யாயத்தைக்

கொண்டு அந்த அதிகரணங்களில் விசாரிக்கப்படாமலிருக்கும் மற்றை வாக்யங்களும் விளக்கப்பட்டனவாகின்றன' என்று "एतेन सर्वे व्याख्याताः" என்னும் ஸூத்ரத்தால் விசாரத்தை முடிக்கிறார். இதைப் பார்க்கும்பொழுது, 'வேதாந்தங்களில் காரணவாதி வாக்யங்கள் அநந்தங்களாக இருக்கின்றன. அவைகளுள் சில வாக்யங்களை உதாஹரணமாக எடுத்து இவ்விடத்தில் வ்யாக்யாநம் செய்தோம். அப்படி எடுக்கப்படாமலுள்ள வாக்யங்களையும், கீழில் விவரிக்கப்பட்டுள்ள ந்யாய கலாபத்தைக் கொண்டு, கீழ் விவரித்திருக்கும் மாதிரியாகவே வ்யாக்யாநம் செய்துகொள்ளலாம்' என்று நிகமநம் செய்திருப்பதாகத் தெரிகிறது.

ஸ்வாமி தேஶிகனும் இம்மாதிரியே ஸாராவளியில் அநுக்ரஹித்திருக்கிறார் :—

"अग्रे संवर्तनं भात्यवितथवचसि क्वाऽपि हैरण्यगर्भं
ग्रस्ताशेषस्वकार्ये तमसि च शिव एवेति केचित्पठन्ति ।
एतादृग्वाक्यवर्गस्फुटभवदधिकाशङ्कनस्तंभनार्थं
प्रागुक्तान्नीतिभेदानतिदिशति परं शिष्यशिक्षैकचित्तः ॥"

['ஸ்ருஷ்டிக்குமுன் ஹிரண்யகர்ப்பனே இருந்தான்' என்று வேதத்தில் ஓரிடத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. மற்றோரிடத்தில், 'ப்ரளய தசையில் ஶிவனே இருந்தான்' என்று ஶிவனுக்குப் பாரம்யம் படிக்கப்பட்டிருக்கின்றது. ஒருக்கால் இவர்களுள் ஒருவரே ஜகத்காரண வஸ்துவாக இருக்கக்கூடுமோ என்று உதிக்கும் அதிக ஆஶங்கையைத் தெளிவிக்கும் பொருட்டு, ஸூத்ரக்காரர் கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ந்யாய விஶேஷங்களையே ஶிஷ்யர்களின் அநுக்ரஹத்தை உத்தேஶித்து இவ்விடத்தில் அதிதேசம் செய்கிறார். "हिरण्यगर्भस्समवर्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत्" என்பது தைத்திரீய உபநிஷத்திலும், "यदा तमस्तन्न दिवा न रात्रिर्न सन्न चासच्छिव एव केवलः" என்பது ஶ்வேதாஶ்வதர உபநிஷத்திலும் காணப்படுகின்றன. இவை, முதல் 34 அதிகரணங்களில் உதாஹரிக்கப்படாதவை. இவைகளுள் ஒன்று 'சதுர்முக ப்ரஹ்மாவே ஜகத் காரணம்' என்றும், மற்றொன்று 'ஶிவன் என்னும் தேவதையே ஜகத் காரணம்' என்றும் சொல்லுகின்றது. இவை இரண்டையும் உதாஹரணமாகக் காட்டி, ஸ்ரீதேசிகன் 'இம்மாதிரி வேறு பல வாக்யங்கள் இருக்கின்றன. அவைகளைப் பார்த்தால் அவைகளில் பேசப்பட்டுள்ள தேவதைகளே பரதேவதையாயிருக்கலாமோவென்று ஶங்கை ஒன்று புதிதாக உதிக்கக்கூடும். அந்த ஶங்கையைக் கீழே விவரிக்கப்பட்டுள்ள ப்ரக்ரியை ப்ரகாரம் நிவர்த்தித்துக் கொள்ளவேண்டும்' என்று விளக்கியிருக்கிறார். இம்மாதிரி ஓரிடத்தில் விளக்கப்படும் ந்யாயத்தை, அவ்விடம் போன்ற மற்றை இடங்களில் அதிதேஶம் செய்வது உண்டு. ஆனால், 'இந்த அதிதேஶம் ஸித்திப்பதற்காக ஒரு தனி அதிகரணம் வேண்டுமோ?

இந்த அதிகரணம் இராவிட்டால், ஸ்வயமாகவே இந்த அதிதேசம் ஸித்திக்கமாட்டாதோ?' என்று ஒரு ஆக்ஷேபம் ஜநிக்கலாம். அதற்கு ஸமாதாநமாக ஸ்ரீதேசிகன், 'சிஷ்யர்களுக்கு விஷயங்களைத் தெளிவாக உரைக்க வேண்டும் என்னும் உதாரமான எண்ணத்துடன் ஸூத்ரக்காரர் இந்த ஸூத்ரத்தை அவதரிப்பித்தார்' [शिष्यशिक्षैकचित्तः] என்று அநுக்ரஹித்திருக்கிறார்.

இது ஸம்பந்தமாக இரண்டொரு விஷயங்கள் விசாசாரார்ஹங்களாக உதிக்கின்றன. முதலாவது:—மந்த மதிகளுக்கு விஷயங்களை விசதமாகச் செய்யவேண்டியதற்காக, ஸ்வயமாகவே ஸித்திக்கும் அர்த்தத்தை அநாவச்யமாகப் புதியதோர் அதிகரண வாயிலாக வளர்த்துவது ஸூத்ர சைலிக்கு ஒத்ததா? எது சொல்லப்படா விட்டால் அர்த்தத்திற்கு லோபம் ஸம்பவிக்கமோ, அதை ஸூசிப்பது மாத்ரமன்றோ ஸூத்ரங்களுடைய லக்ஷணம்? இரண்டாவது:—'சதுர்முகன் ஜகத் காரணமோ? சிவன் ஜகத் காரணமோ?' என்னும் சங்கை அதிகாசங்கை ஆகுமோ? ஏற்கெனவே ஜநித்துப் பரிஹாரம் செய்யப்பட்டிருக்கும் சங்கையைக் காட்டிலும் அதிகமான சங்கை யன்றோ அதிகா சங்கை ஆகக் கூடும்? "एतेन योगः प्रत्युक्तः" என்னும் அதிதேச ஸூத்ரத்தில், 'காபில ஸ்ம்ருதி நிராகரணத்தால் யோக ஸ்ம்ருதியும் ப்ரத்யுக்தமாகிவிட்டது' என்று சொல்லுமிடத்தில், 'வேதாந்த ப்ரவசநத்தில் அநதிக்ருதரான கபிலருக்கு ப்ராந்தி ஸம்பவம் இருக்கலாம்; வேதாந்த ப்ரவசநத்தில் அதிக்ருதராயும் ஈச்வரனை அப்யுபகமம் செய்பவராயுமிருக்கும் ஹிரண்ய கர்ப்பருக்கும் ப்ராந்தி ஸம்பவிக்குமோ?' என்னும் புதிதான சங்கையன்றோ அதிகாசங்கையாகக் கூறப்பட்டிருக்கின்றது? அப்படிப்பட்ட வைலக்ஷண்யம் ப்ரக்ருதத்தில் ஒன்றும் தெரியவில்லையே. அந்தரதிகரணத்தில் ஆதித்யாதி தேவதா விசேஷங்களுக்கும், இந்த்ர ப்ராணாதிகரணத்தில் தேவாதிபதியான இந்த்ரனுக்கும், ஈக்ஷதி கர்மாதிகரணத்தில் அண்டாதிபதியான சதுர்முகனுக்கும் ஸம்பவிக்கும் காரணத்வ சங்கையைக் காட்டிலும், ப்ரக்ருதத்தில் சதுர்முகனுக்கும் சிவனுக்கும் ஜநிக்கும் காரணத்வ சங்கை எந்த அம்சத்தில் அதிகமானது? இந்த சங்கையை எப்படி அதிகாசங்கையென்று சொல்லி ஸூத்ராவதாரத்தை ஸமர்த்திக்கக் கூடும்? இம்மாதிரி சில விஷயங்கள் இவ்விடத்தில் விசாரணீயங்களாகத் தோன்றுகின்றன.

இந்த விஷயத்தில் ஸ்ரீச்ருதப்ரகாசிகையில் வேறு விதமான நிர்வாஹ மொன்று காணப்படுகின்றது. அது என்னவென்றால்:—வேதாந்தங்களில் காணப்படும் வாக்யங்கள் குறிப்பிட்ட ஒரு சப்தத்தால் ஜகத்காரண வஸ்துவை நிர்த்தேசியாமல், பற்பல சப்தங்களால் நிர்த்தேசிக்கின்றன. "सदेव सोम्य" இத்யாதிகளில் ஸர்வ ஸாதாரணங்களான 'ஸத்' சப்தம் முதலியவைகளாலும், "तावेतौ सत्वक्षेत्रज्ञौ" இத்யாதிகளில் சேதந மாத்ர அஸா

தாரணங்களான ‘க்ஷேத்ரஜ்ஞ’ ஶப்தம் போன்ற ஶப்தங்களாலும், “अजामेकां” இத்யாதிகளில் அசித்துக்களையே குறிக்கும் ப்ரக்ருதி வாசகங்களான ஶப்தங்களாலும், ‘‘आत्मन आकाशः’ இத்யாதிகளில் ஜீவன் ஈஶ்வரன் இவரிருவருக்கும் ஸாதாரணங்களாயுள்ள ‘ஆத்மா’ போன்ற ஶப்தங்களாலும்,’ “आकाशादेव समुत्पद्यन्ते” இத்யாதிகளில் ஒரு அசேதந விஶேஷத்தைக் குறிக்கும் ‘ஆகாஶம்’ போன்ற ஶப்தங்களாலும், இந்த்ர ஶப்தத்துடன் கூடிய உபாஸநா ஶ்ருதியில் ஒரு சேதநனையே விஶேஷித்துக் குறிக்கும் ‘இந்த்ரன்’ போன்ற ஶப்தங்களாலும், புருஷஸூக்தாதிகளில் பரமபுருஷனுக்கே அஸாதாரணங்களாயுள்ள ‘புருஷ’ ஶப்தம் போன்ற ஶப்தங்களாலும், இவ்வாறு பலவிதமாக ஜகத் காரண வஸ்து நிர்த்தேஶிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த வாக்யங்களுள் பலவற்றை ஸ்ரீ வ்யாஸர் இந்த அத்யாயத்தில் உதாஹரித்து, ப்ரக்ருதி முதலியவைகளை வ்யாவர்த்திக்கக்கூடிய ஈக்ஷண விஶேஷம் முதலான பரமபுருஷ அஸாதாரண தர்ம விஶேஷங்கள் அந்த விடங்களில் ஶ்ருதங்களாக இருக்கிறபடியால் அவைகளின் பலத்தை அவலம்பித்து ‘அந்த வாக்யங்களெல்லாம் சிதசித் விலக்ஷணமான பரப்ரஹ்மமாகிற தேவதா விஶேஷத்தையே ப்ரதிபாதிக்கின்றன’ என்று ஸமர்த்தித்தார். பிறகு, ‘கீழ் உதாஹரிக்கப்பட்டுள்ள வாக்யங்களைக் காட்டிலும் வேறுபட்ட அநுதாஹ்ருத வாக்யங்கள் பல உள. அவைகளுள் சில வாக்யங்களில் பரமபுருஷாஸாதாரண தர்மங்களொன்றும் சொல்லப்படாமலே கேவலம் ஜகத்காரணத்வம் மாத்ரம் ஶ்ருதமாக இருக்கின்றதே. அப்படிப்பட்ட வாக்யங்களில் ஏன் உள்ளபடி பொருள் கொள்ளக் கூடாது?’ என்று ஒரு ஶங்கை உதிக்கக் கூடுமென்று நினைத்து, அதற்குப் பரிஹாரமாக இந்தக் கடைசி ஸூத்ரத்தை அவதரிப்பித்தார் என்று உபபாதித்தார். இவ்வாறு உபபாதித்துவிட்டு ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யர் இந்த ஶங்கைக்குப் பரிஹாரமும் கீழில் பாதசதுஷ்டயத்தால் ஏற்படும் நிர்ணயமே என்று விளக்குகிறார். முதல் பாத சதுஷ்டயத்தில் காரணவாதி வாக்யங்கள் பல உதாஹரிக்கப்பட்டு, அவை யெல்லாவற்றிலும் ‘சேதநாசேதந விலக்ஷணமான பரப்ரஹ்மமே ஜகத்காரண வஸ்து’ என்பது ப்ரதிபாதிக்கப்படுவதாக ஸமர்த்திக்கப்பட்டிருக்கிறபடியால், காரணத்வமும் ஈக்ஷண விஶேஷாதிகள்போல் பரமபுருஷாஸாதாரண தர்மமாகின்றது என்றன்றோ நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது? ஆகையால், வேறு ஒரு தர்மமும் ஶ்ருதமாகாமல் காரணத்வ மாத்ரம் தென்படும் இடங்களிலும் அந்தக் காரணத்வமொன்றே அந்த வாக்யங்களுக்குப் பரப்ரஹ்ம பரத்வத்தை ஸாதித்துக்கொடுக்கப் போதுமான ஹேது என்பது ஸித்தம். இதுதான் பாத சதுஷ்டயத்திலிருந்து ஏற்படும் ந்யாயம். ஸூத்ரத்திலுள்ள “एतेन” என்னும் ஶப்தம் இந்த நிர்ணயத்தையே குறிக்கின்றது.

ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவுள்ளமும் இதுவாகவே இருக்கின்றது என்பதையும் ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் நன்கு

விளக்கியிருக்கிறார். இவ்விடத்தில் ஸ்ரீபாஷ்ய பங்க்தியாவது:— “पादचतुष्टयोक्तन्यायकलापेन, सर्ववेदान्तेषु जगत्कारणप्रतिपादनपरास्सर्वे वाक्यविशेषाश्चेतनाचेतनविलक्षणसर्वज्ञसर्वशक्तिब्रह्मप्रतिपादनपरा व्याख्याताः” [கீழில் நாலு பாதங்களில் விவரிக்கப்பட்டுள்ள ந்யாய கலாபங்களைக் கொண்டு, ஜகத்காரணத்வம் ஶ்ருதமாக இருக்கும் வாக்யங்களெல்லாம் சேதநாசேதந விலக்ஷணமான பரப்ரஹ்மத்தையே ப்ரதிபாதிக்கின்றனவென்று அறிந்து கொள்ளலாம்]. இதற்கு ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் வ்யாக்யாநம் செய்யுமிடத்தில், “जगत्कारणप्रतिपादनपरा इतीदं पदं हेतुगर्भम। कारणविषयत्वमेव हि अधिकाराशङ्कायाः परिहारहेतुः” [ஸ்ரீ பாஷ்யகார திவ்யஸூக்தியில் காணப்படும் ‘ஜகத்காரணத்வம் எவ்விடத்தில் ஶ்ருதமாக இருக்கின்றதோ அந்த வாக்யங்களெல்லாம்’ என்னும் பதம் ஸாபிப்ராய விஶேஷணம். அது, சொல்லப்படப் போகும் ஸாத்யத்திற்கு ஹேதுவைக் குறிக்கின்றது. ‘இது ஜகத்காரணம்’ என்று ஒன்று பேசப்பட்டால் அது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதன்று என்பதை நிர்ணயிப்பதற்குப் போதுமான ஹேதுவன்றோ?]

இதனால் ஏற்படுவது என்னவென்றால் :—(1) ப்ரக்ருத ஸூத்ரத்திற்கு விஷயம், பாத சதுஷ்டயத்தில் அநுதாஹ்ருதங்களான காரணவாதி வாக்யங்களெல்லா மன்று; ஆனால் அவைகளுள் எந்த எந்த வாக்யங்களில் பரமபுருஷாஸாதாரண தர்மமொன்றும் ஶ்ருதமாக இராமல் கேவலம் ஜகத் காரணத்வம் மாத்ரம் ஶ்ருதமாக இருக்கின்றதோ அந்த வாக்யங்கள் மாத்ரமே விஷயம்; மற்றை அநுதாஹ்ருத வாக்யங்கள் ஸ்வயமாகவே ஸித்திக்கும் அதிதேஶத்தால் வ்யாக்யாதங்கள். (2) இந்த அதிகரணம் அவதரிப்பதற்கு அதிகாஶங்கை, ஹிரண்ய கர்ப்பனுக்கும் இவனுக்கும் பாரம்யத்தைச் சொல்லும் வாக்யங்களால் ஜநிக்கும் ஶங்கையன்று; ஆனால் ஜகத் காரணத்வம் மாத்ரம் ஶ்ருதமாக இருக்கும் வாக்யங்களில் யதா ப்ரதிபந்ந வஸ்துவை ஏன் அப்யுபகமம் செய்யக்கூடாது என்று உதிக்கும் சங்கையே அதிகாஶங்கை. (3) இந்த அதிகாஶங்கைக்குப் பரிஹாரம், கீழ் அதிகரணங்களில் விவரிக்கப்பட்டுள்ள ந்யாய பேதங்களன்று; ஆனால், ஈக்ஷண விஶேஷாதிகள் எப்படிப் பரம புருஷனுக்கு அஸாதாரண தர்மமோ அப்படியே ஜகத் காரணத்வமும் அவனுக்கு அஸாதாரணமான தர்மமே என்று அந்த அதிகரணங்களிலிருந்து ஸித்திக்கும் நிர்ணயமே அந்த ஶங்கைக்குப் பரிஹாரம்.

ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யரால் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள இந்த நிர்வாஹத்தை உதாஹரியாமல், ஸ்ரீதேஶிகன் வேறு விதமாக ஒரு நிர்வாஹத்தை ஏன் விளக்கி யிருக்கிறார் என்பது புலப்படவில்லை.

श्रीः

॥ प्रश्नोपनिषत् ॥

॥ प्रथमः प्रश्नः ॥

हरिः ओम् । सुकेशा च भारद्वाजः, शैब्यश्च सत्यकामः, सौर्यायणी च गार्ग्यः, कौसल्यश्चाश्वलायनी, भार्गवो वैदर्भिः, कबन्धी कात्यायनस्ते हैते ब्रह्म-

---

ஸ்ரீ:

முதல் ப்ரஶ்நம்

இந்த உபநிஷத்தும் மற்றை உபநிஷத்துக்கள் போல் ஒரு ஆக்யாயிகையின் வாயிலாகத் தத்வத்தை உணர்த்துகின்றது. இவ்விடத்திய ஆக்யாயிகை என்னவென்றால் :—ஒரு காலத்தில் ஸுகேஶர் ஸத்யகாமர் ஸௌர்யாயணி கௌஸல்யர் பார்க்கவர் கபந்தீ என்று ஆறு ருஷிகள் இருந்தார்கள். அவர்களெல்லாரும் வேதாத்யயநத்தையே பராயணமாகவும் வேதார்த்தத்தை விசாரிப்பதிலேயே நோக்குள்ளவர்களாகவும் இருந்தும், ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் மிகப் பெரிதாக இருக்கும் பர ப்ரஹ்மத்தை அறியாதவர்களாய், அதை அறியவேண்டுமென்னும் இச்சையுடன், மஹா ப்ரஹ்மவித்தான பிப்பலாதர் என்னும் மஹர்ஷியை அடைந்து, ப்ரஹ்மத்தை உபதேஶிக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். பிப்பலாதரும் அந்த ப்ரார்த்தனைக்கு இணங்கி அவர்களுள் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு ப்ரஶ்நம் கேட்கும்படி அநுமதி கொடுத்தார். அப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு ப்ரஶ்நம் செய்ய, ஆறு ப்ரஶ்நங்கள் ஏற்பட்டன. அந்த ப்ரஶ்நங்களும் அவைகளின் ஸமாதாநங்களுமே இந்த உபநிஷத்தின் விஷயம். இந்தக் காரணத்தைக்கொண்டே இந்த உபநிஷத்துக்கு 'ப்ரஶ்நோபநிஷத்' என்னும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த ப்ரஶ்நங்களுக்குச் சொல்லப்பட்டுள்ள ஸமாதாநங்கள் ஸாமாந்ய ஜநங்களுக்கு வ்யக்தமாக விளங்கமாட்டா. ஸமாதாநம் முழுவதும் நேருக்கு நேராக இராமல் பரோக்ஷ ரூபமாகவே சொல்லப்படுகின்றன. அதற்குக் காரணம் அவை ஸ்புடதரமான உபதேஶத்திற்கு அநர்ஹமானவை என்பதே. "**परोक्षप्रिया इव हि देवाः**" [தேவர்கள் தாம் செய்யும் உபதேஶத்தைப் பரோக்ஷமாகச் செய்ய ப்ரியப்படுவார்கள் போலும்] என்பது ஶ்ருதி வாக்யம். நமது ஆசார்யர்கள், இந்த ப்ரஶ்நங்களெல்லாம் தத்வங்களையே உணர்த்துகின்றனவென்றும், ஸமாதாநங்களும் அந்தத் தத்வங்களையே ப்ரதிபாதிக்கின்றனவென்றும் உபபத்தி பூர்வகமாக நிர்ணயித்திருக்கிறார்கள். அந்த உபபத்திகள் என்னவென்பதைச் சற்று விசாரிப்போம்.

இவ்விடத்திற் செய்யப்படும் ப்ரஶ்நங்களுள் முதல் ப்ரஶ்நமானது "இந்த ப்ரஜைகளெல்லாம் எவ்விடமிருந்து உண்டாகின்றன?"

परा ब्रह्मनिष्ठाः परं ब्रह्मान्वेषमाणाः 'एष ह वै तत्सर्वं वक्ष्यति' इति ते ह समित्पाणयो भगवन्तं पिप्पलादमुपसन्नाः ॥ ॥१॥

என்பது. அதற்கு ஸமாதாநம் சொல்ல ஆரம்பிக்குமிடத்தில், 'ப்ரஜா பதியானவர் ப்ரஜைகளை உண்டுபண்ண வேண்டுமென்று இச்சித் தார். அவர் தபஸ் செய்தார். தபஸ் செய்து 'ரயி' 'ப்ராணன்' என்று சொல்லப்படும் இரண்டு வஸ்துக்களை ஸ்ருஷ்டித்தார். இவை இரண்டும் பஹுவாக ப்ரஜைகளை உண்டுபண்ணும் என்பது அவருடைய கருத்து' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்விடத்தில் 'ப்ரஜாபதி' என்னும் பதம் பரப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது என்பது நமது ஸித் தாந்தம். ஆனால், 'ப்ரஜாபதி' என்று பதப்ரயோகம் செய்யப்பட்டிருப் பதையும் 'அவர் தபஸ் செய்து ஸ்ருஷ்டித்தார்' என்று கர்மாதீந ஸ்ருஷ்டி சொல்லப்பட்டிருப்பதையும் பார்க்கும்பொழுது, 'ஜகத்தை ஸ்ருஷ்டித்தவர் ப்ரஜாபதி என்று சொல்லப்படும் சதுர்முக ப்ரஹ்மாவே; அவரே ஜகத் காரணம்' என்று ப்ரதிபாதிக்கப்பட் டிருப்பதாகத் தோன்றலாம். அது சரியன்று. ஏனென்றால், இந்தக் கண்டத்திலேயே கடைசியில் பரப்ரஹ்ம ப்ராப்தியே பலமாகச் சொல்லப்பட்டிருக்கின் றது; அர்ச்சிராதி கதியை ஸங்க்ரஹமாகக் குறிப்பிட்டு அபுநராவ்ருத்தி யும் சொல்லப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் 'பரப்ரஹ்மமே இவ் விடத்தில் ப்ரதிபாதிக்கப்படுகின்றது' என்பதை ஸூசிப்பிக்கப் போது மான லிங்கம். சதுர்முக ப்ரஹ்மாவை உபாஸிப்பவர்களுக்கு, இம் மாதிரி பலம் ஓரிடத்திலும் சொல்லப்படவில்லையன்றோ? நிற்க: இந்த ஆறு ருஷிகளும் பரப்ரஹ்ம விஷயமாக உபதேஶம் பெறுவதற்காகவே பிப்பலாதரை வந்து அடைந்ததாக முதலிற் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால், பிப்பலாதராற் செய்யப்படும் உபதேஶம் பரப்ரஹ்ம விஷ யமாகவே இருத்தல் வேண்டும் என்பது ஸித்தம்.

1. [ப - ரை.] **भारद्वाजः** - பரத்வாஜருடைய குமாரராகிய, **सुकेशा च** - ஸுகேஶரும், **शैब्यः** - ஶிபியின் குமாரராகிய, **सत्यकामः** - ஸத்யகாம ரும், **गार्ग्यः** - கார்க்க கோத்ரோத்பவரான, **सौर्यायणी** - ஸௌர்யாயணியும், **आश्वलायनः** -அஶ்வலாயநருடைய குமாரராகிய, **कौसल्यः** - கௌஸல்யரும், **वैदर्भिः** - விதர்ப்பருடைய குமாரராகிய, **भार्गवः** - பார்க்கவரும், **कात्यायनः** - காத்யாயந கோத்ரத்தில் ஜநித்த, **वैदर्भिः** - வைதர்ப்பி என்பவரும், **ते ह**- ப்ரஸித்தர்களான, **एते** - இந்த [ஆறு ருஷிகளும்], **ब्रह्मपराः** - வேதத்தையே எப்பொழுதும் அத்யயநம் செய்பவராகவும், **ब्रह्मनिष्ठाः** -அந்த வேதத்தின் அர்த்தத்தையே எப்பொழுதும் விசாரிப்பவராகவும் இருந்துகொண்டு, **परं ब्रह्म**-உத்க்ருஷ்டமான ப்ரஹ்மத்தை [ஸ்வரூபத்தாலும் குணத்தாலும் மிகப்பெரிதாயிருக்கும் வஸ்துவை], **अन्वेषमाणाः**-அறிய வேண்டுமென்னும் ஆவலுடையவர்களாய், **एष ह वै** - இந்த [அதாவது: நம்மால் ப்ரஹ்மவித் தென்று க்ரஹிக்கப்பெற்று நம்முடைய புத்தியில் தென்படும் இந்தப்

तान् ह स ऋषिरुवाच "भूय एव तपसा ब्रह्मचर्येण श्रद्धया संवत्सरं संवत्स्यथ। यथाकामं प्रश्नान् पृच्छथ। यदि विज्ञास्यामः सर्वं ह वो वक्ष्यामः" इति॥ ॥२॥

பிப்பலாதர் என்னும் மஹர்ஷி], **तत्सर्वं** - அதெல்லாவற்றையும் [அதாவது: நாம் அறிய விரும்பும் அர்த்தங்களெல்லாவற்றையும்], **वक्ष्यति** - உபதேசிப்பர், **इति** - என்று [ஆலோசித்து], **ते ह** - அவர்களெல்லாரும், **समित्पाणयः** - ஸமித் சுமையைக் கையில் எடுத்துக்கொண்டு, **भगवन्तं पिप्पलादम्** - பூஜ்யரான பிப்பலாதர் என்னும் மஹர்ஷியை, **उपसन्नाः** - அடைந்தார்கள்.

सुकेशा - என்பதில் ஆகாராந்தமும், **सौर्यायणी** - என்பதில் ஈகாராந்தமும், வேதத்திற்கு ஒத்த ரூபங்கள். **समित्पाणयः** - ப்ரஹ்மோபதேசத்தை உத்தேஶித்து ஆசார்யனிடம் உபஸதநம் செய்யும் காலத்தில் ஶிஷ்யர்கள் ஸமித் சுமையை உபாயநமாகக்கொண்டுபோய் ஸமர்ப்பிக்க வேண்டுமென்று ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது.

---

2. [ப-ரை.] **तान् ह** - அந்த ருஷிகளை நோக்கி, **स ऋषिः** - அந்த ருஷியானவர் [பிப்பலாதர்], **उवाच** - சொன்னார். [அவர் சொன்னது என்னவென்றால்:—] "**भूय एव** - மறுபடியும், **तपसा** - [ஶரீரஶோஷணத்தை லக்ஷணமாகவுடைய] தபஸ்ஸுடனும், **ब्रह्मचर्येण** - ப்ரஹ்மசர்ய வ்ரதத்துடனும், **श्रद्धया** - [ஆஸ்திக்ய புத்தியை லக்ஷணமாக உடைய] ஶ்ரத்தையுடனும் [கூடினவர்களாய்], **संवत्सरं**-ஒரு வர்ஷ காலம், **संवत्स्यथ**- [இவ்விடத்தில்] வஸியுங்கள். **यथाकामम्** - [அதற்குப் பிறகு] யதேஷ்டமாக, **प्रश्नान्** - ப்ரஸ்நங்களை, **पृच्छथ** - கேளுங்கள். **यदि विज्ञास्यामः** - [நீங்கள் கேட்கும் அர்த்தங்களை] நாம் அறிந்திருந்தோமேயானால், **सर्वं** - எல்லாவற்றையும் [வஞ்சனையின்றிக்கே], **वः** - உங்களுக்கு, **वक्ष्यामः** - உபதேஶிப்போம்," **इति** - என்று.

भूय एव - மறுபடியும். ஏற்கெனவே அந்த ஆறு ருஷிகளிடத்தில் தபஸ் ப்ரஹ்மசர்யம் ஶ்ரத்தை இவையெல்லாம் பூர்ணமாக இருந்தனவென்பதை இந்தப் பதம் ஸூசிப்பிக்கின்றது. அப்படியிருந்தும், ப்ரஹ்ம வித்யையை க்ரஹிப்பதற்காக மறுபடியும் அவைகளின் ஸம்பத்தியை ஸம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பது தாத்பர்யம். கிற்கு, ஶிஷ்யர்கள் கிடைத்தார்கள் என்னும் ஸந்தோஷத்தால், ஸஹஸா ப்ரஹ்ம வித்யையை அவர்களுக்கு உபதேஶிக்கக்கூடாது என்று ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது. பெற்றது குணமாக உபதேஶித்தால் '**शिष्यपापं गुरोरपि**' என்கையாலே ஆசார்யனுக்கு நிஷ்டை குலையுமன்றோ? தவிர இம்மாதிரி ஒரு வ்ரதத்தை விதிப்பது ஶிஷ்யர்களுடைய ஶ்ரத்தையின் உறுதியைப் பரீக்ஷிக்கவும் ஆகும்.

अथ कबन्धी कात्यायन उपेत्य पप्रच्छ "भगवन् कुतो ह वा इमाः प्रजाः प्रजायन्ते ?" इति ॥ ॥ ३ ॥

तस्मै स होवाच "प्रजाकामो ह वै प्रजापतिः । स तपोऽतप्यत । स तपस्तप्त्वा । स मिथुनमुत्पादयते रयिश्च प्राणश्चेत्येतौ मे बहुधा प्रजाः करिष्यत इति ॥ ॥ ४ ॥

"आदित्यो ह वै प्राणो रयिरेव चन्द्रमाः । रयिर्वा एतत्सर्वं यन्मूर्तश्चामूर्तश्च । तस्मान्मूर्तिरेव रयिः ॥ ॥ ५ ॥

---

3. [ப - ரை.] **अथ** - பிறகு [ஒரு வர்ஷம் அம்மாதிரி வஸித்த பிறகு], **कात्यायनः कबन्धी** - காத்யாயந கோத்ரஜரான கபந்தீ என்பவர், **उपेत्य** - [பிப்பலாதரிடம்] வந்து, **पप्रच्छ** - கேட்டார். "**भगवन्** - ஹே பூஜ்யரே!, **इमाः प्रजाः** - இந்த ப்ரஜைகளெல்லாம், **कुतो ह वा** - எவ்விடமிருந்து, **प्रजायन्ते** - உண்டாகின்றன." இந்த ப்ரஶ்நத்தின் தாத்பர்யம் :—இந்த ஜகத்தின் ஸ்ருஷ்டியைச் செய்பவர் யார்?' என்பதே.

---

4. [ப - ரை.] **तस्मै** - அவருக்கு, **स ह** - அந்தப் பிப்பலாதர், **उवाच** - [பின் வருமாறு] உபதேஶித்தார். **प्रजापतिः** - பரமாத்மா, **प्रजाकामो ह वै** - ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்க வேண்டுமென்னும் விருப்பத்தை உடையவரன்றோ? **सः** - அந்தப் பரமாத்மா, **तपः** - [ஸ்ருஷ்டிக்க வேண்டு னும் ஸங்கல்ப ரூபமான] தபஸ்ஸை, **अतप्यत** - செய்தார். **सः** - அந்தப் பரமாத்மா, **तपः** -அந்த ஸங்கல்பத்தை- **तप्त्वा** ஸங்கல்பித்து, **रयिश्च प्राणश्च**- ரயி என்றும் ப்ராணன் என்றும், **मिथुनम्** - மிதுநத்தை, **उत्पादयते** - ஸ்ருஷ்டிக்கிறார். '**एतौ** - இந்த இரண்டும், **मे** - எனக்கு, **बहुधा** - அநேக விதமான, **प्रजाः** - ப்ராணிகளை, **करिष्यतः** - உண்டுபண்ணுவார்கள்', **इति** - என்னும் [அபிப்ராயத்துடன் அந்த மிதுநத்தை ஸ்ருஷ்டித்தார்.]

'**रयि**' என்பது ப்ரக்ருதி என்னும் தத்வத்தையும், '**प्राणः**' என்பது ஜீவன் என்னும் தத்வத்தையும் குறிக்கின்றன. இது மேல் வரும் விவரணத்திலிருந்து விளங்கும். ஜகத் ஸ்ருஷ்டியைச் செய்யும் காலத்தில் பகவான், முதலில் சேதந தத்வம் அசேதநதத்வம் இவைகளை ஸ்ருஷ்டிப்பதாகவே ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அந்த இரண்டுமே இவ்விடத்தில் விவக்ஷிதம்.

---

5. இந்த மந்த்ரத்தில் 'ரயி' என்பதன் அர்த்தம் விளக்கப்படுகின்றது. 'ஆதித்யன்' என்பதன் கருத்து அடுத்த மந்த்ரத்தில் விளக்கப்படுகின்றது.

[ப - ரை.] **आदित्यो ह वै प्राणः** - ஆதித்யன் என்பதே ப்ராணன். **रयिरेव चन्द्रमाः** - சந்த்ரனே ரயி. **यन्मूर्तश्च अमूर्तश्च** -மூர்த்தமாயும் அமூர்த்தமாயுமிருக்கும், **एतत्सर्वम्** - இதெல்லாம், **रयिर्वा** - 'ரயி' என்பதே. **तस्मात्** - ஆகையால், **मूर्तिरेव** - மூர்த்தியே, **रयिः** - போக்யமான வஸ்து.

"अथादित्य उदयन् यत्प्राचीं दिशं प्रविशति, तेन प्राच्यान् प्राणान् रश्मिषु सन्निधत्ते । यद्दक्षिणां यत्प्रतीचीं यदुदीचीं यदधो यदूर्ध्वं यदन्तरादिशो यत्सर्वं प्रकाशयति तेन सर्वान् प्राणान् रश्मिषु सन्निधत्ते ॥ ॥ ६ ॥

'रयि' என்னும் பதம் போக்யமாயுள்ள வஸ்துக்களெல்லாவற்றையும் குறிக்கும். அந்தப் போக்யதையை உத்தேஶித்தே அதைச் சந்த்ரனென்று பேசுகிறார். ஐந்து மஹா பூதங்களும் ஒருவிதமான பரிணாமத்தை அடைந்து போக்ய வஸ்துக்களாக மாறுகின்றபடியால் அவைகளின் கார்யமே 'ரயி' ஆகும். அந்த மஹா பூதங்களுள் ப்ருதிவீ அப் தேஜஸ் மூன்றும் கடிநமாக இருப்பதால் மூர்த்தங்கள் என்றும், வாயு ஆகாஶம் இரண்டும் காடிந்ய மற்றவையாதலால் அமூர்த்தங்களென்றும் சொல்லப்படுகின்றன.

आदित्यः என்பது ஸூர்யனைக் குறிக்கும் இவ்விடத்தில் ஜீவனை ஆதித்யனென்று பேசுவதற்கு உபபத்தி, ஸூர்யனைப்போல் ஜீவனும் போக்தாவாகிறான் என்பதே. [**आदत्त इति आदित्यः** - அநுபவத்திற்காக எடுத்துக்கொள்ளுகிறான்.] என்னும் வ்யுத்பத்தியால் ஸூர்யனைப் போக்தாவென்று சொல்லக்கூடுமன்றோ? இதிலிருந்து ஸித்திப்பது என்னவென்றால்; 'பரமாத்மா ஸங்கல்பித்தான்; ஸங்கல்பித்துப் போக்தாவாகிற ஜீவனையும் போக்யமாகிற அசேதந தத்வத்தையும் ஸ்ருஷ்டித்தான்' என்பதே. "**भोक्ता भोग्यं प्रेरितारं च मत्वा**" என்கிறபடி தத்வங்கள் மூன்றே.

---

6. ஜீவ தத்வத்தை 'ஆதித்யன்' [ஸூர்யன்] என்று வ்யவஹரிப்பதன் உபபத்தி விளக்கப்படுகின்றது. ஸூர்யன் உதயமானவுடன், அவனது கிரணங்கள் ஸகல திக்குக்களிலும் பரவி ஆங்காங்கு இருக்கும் பதார்த்தங்களை ப்ரகாசிப்பிப்பதுபோல, இந்த ஜீவனும், ஸுஷுப்தி ஸ்தாநத்திலிருந்து விழித்துக்கொண்டவுடன், தேஹத்தில் நாலு பக்கங்களிலும் இருக்கும் இந்த்ரியங்களில் தனது தர்ம பூத ஜ்ஞாநத்தைச் செலுத்தி அந்த இந்த்ரியங்களைப் பரிக்கிறான். ஆகையால், அவனை ஸூர்யனாகப் பேசுவது உபபந்நமே. நிற்க, இம்மாதிரி தர்மபூத ஜ்ஞாநத்தின் வழியாக ப்ராணங்களாகிற இந்த்ரியங்களை அவன் பரிக்கிறபடியால் அவனை ப்ராணனென்று பேசுவதும் உபபந்நமே. இதுதான் இந்த மந்த்ரத்திற் சொல்லப்படும் பொருள்.

[ப - ரை.] **अथ** - பிறகு ['ரயி' என்னும் ஶப்தத்தை நிரூபித்த பிறகு ப்ராணனாகிற 'ஆதித்ய' ஶப்தம் நிரூபிக்கப்படுகின்றது]. **आदित्यः** - ஸூர்யன், **उदयन्** - உதயமாகிக்கொண்டு, **यतः** - எந்தக் காரணத்தால், **प्राचीं दिशम्** - கிழக்குத் திக்கை, **प्रविशति**-ப்ரவேஶிக்கிறானோ, **तेन** - அந்தக் காரணத்தால், **प्राच्यान्** கிழக்குத் திக்கிலுள்ள [கண் முதலிய] **प्राणान्** - இந்த்ரியங்களை, **रश्मिषु** - [தனது தர்மபூத ஜ்ஞாநமாகிற] கிரணங்கள் வழியாக, **सन्निधत्ते** - நியமிக்கிறான். [மேல் வரும் "**यद्दक्षिणाम्**" இத்யாதி

"स एष वैश्वानरो विश्वरूपः प्राणोऽग्निरुदयते । तदेतदृचाऽभ्युक्तम् ॥ ॥७॥

யான வாக்யங்களில், இம்மாதிரி வாக்யஶேஷத்தைப் பூரணம் செய்து கொள்ளவேணும்]. **यद्दक्षिणाम् [प्रविशति तेन दाक्षिणात्यान् प्राणान् रश्मिषु सन्निधत्ते]** - தெற்குத் திக்கில் ப்ரவேஶிக்கையில் [தெற்குத் திக்கிலுள்ள இந்த்ரியங்களைப் பரிக்கிறான்]. **यत्प्रतीचीम्** - மேற்கிலும் அப்படியே; **यदुदीचीम्** - வடக்கிலும் அப்படியே; **यदधः** - கீழிலும்; **यदूर्ध्वं** - உயரவும்; **यदन्तरा दिशः** - மற்றை அந்தராள திக்குக்களிலும். **यत्सर्वम्** - எந்தக் காரணத்தால் எல்லாவற்றையும், **प्रकाशयति** - பிரகாசிப்பிக்கிறானோ, **तेन** - அந்தக் காரணத்தால், **सर्वान् प्राणान्** - எல்லா இந்த்ரியங்களையும், **रश्मिषु**- [தனது] கிரணங்களின் வழியாக, **सन्निधत्ते** - ப்ரவர்த்திப்பிக்கிறான்.

---

7. ப்ரஜைகளின் உத்பத்தியைப்பற்றிக் கேட்டதற்கு, 'பகவான் ஸ்ருஷ்டி செய்யவேண்டுமென்று ஸங்கல்பிக்கிறான். அப்பொழுது சேதந தத்வத்தையும் அசேதந தத்வத்தையும் ஸ்ருஷ்டிக்கிறான். அப்படி ஸ்ருஷ்டிக்கப்பட்ட அசேதந தத்வமும் அதன் கார்யங்களும் ஜீவன்களுக்குப் போக்ய வஸ்துக்களாகின்றன. ஜீவன்கள் அவைகளை அநுபவிக்கிறபடியால், அவர்கள் போக்தாக்களாகிறார்கள். நம்முடைய தேஹம் அதிலுள்ள இந்த்ரியங்கள் இவையெல்லாம் அசேதந தத்வத்தின் பரிணாமங்கள். இந்த ஜீவன் அதில் ப்ரவேஶித்து அவைகளில் தனது தர்ம பூத ஜ்ஞாநத்தைப் பரவச் செய்த பிறகே, அந்தத் தேஹேந்த்ரியங்களுக்குத் தம் தம் கார்யங்களில் ப்ரவர்த்திக்க யோக்யதை உண்டாகின்றது' என்று ஸமாதாநம் சொன்னார். இப்பொழுது, ஜீவனென்னும் அந்தச் சேதந தத்வமும் பரமாத்மாவால் ப்ரவேசிக்கப் பெற்றே போக்தாவாகின்றது. அதாவது:—அசேதந தத்வமாகிற இந்த்ரியாதிகளுக்குச் சேதநனாகிற ஜீவன், உள்ளில் ப்ரவேஶித்து அவைகளைக் கார்யங்களில் ப்ரவர்த்திப்பிப்பதுபோல, பரமாத்மாவானவன் ஜீவதத்வத்தின் உள்ளில் ப்ரவேஶித்து அவைகளைக் கார்யங்களில் நியமிக்கிறான்' என்று 'ஜீவன் பரப்ரஹ்மத்தைத் தனது ஆத்மாவாக உடைத்தாயிருக்கிறான்' என்பதை விவரிக்கிறார்.

[ப - ரை.] [**यः** - எந்தப் பரமாத்மா கீழில் 'ப்ரஜாபதி' என்னும் ஶப்தத்தால் ப்ரஸ்தாவிக்கப்பட்டாரோ], **स एषः** - அந்த, **वैश्वानरः**- ஸகல ப்ராணிகளையும் நயிப்பிக்கிறவனாதலால் 'வைஶ்வாநர' ஶப்தத்தால் நிர்த்தேஶிக்கத் தகுந்தவனாகவும், **विश्वरूपः** - விஶ்வம் முழுவதையும் தனது சரீரமாக உடையவனாகவும், **अग्निः** - உயர்ந்த ப்ராப்யத்தை ப்ராபிக்கக் கூடியவனாதலால் 'அக்நி' என்னும் ஶப்தத்திற்கு வாச்யனாகவும் [இருக்கும் பரமாத்மா], **प्राणः** - 'ப்ராண' என்னும் ஶப்தத்தால் சொல்லப்

"विश्वरूपं हरिणं जातवेदसं परायणं ज्योतिरेकं तपन्तम्। सहस्ररश्मि-श्शतधा वर्तमानः प्राणः प्रजानामुदयत्येष सूर्यः॥ ॥८॥

படும் போக்தாவின் ரூபத்தை அடைந்துகொண்டு, **उदयते** - உதயமாகிறான். **तदेतत्** - அந்த ப்ரஹ்மத்தைக் குறித்து, **ऋचा** - ருக் மந்த்ரத்தில், **अभ्युक्तम्** - [பின் வருமாறு] சொல்லப்பட்டிருக்கின்றது.

---

8. இது ருக். இதில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்த்தால், கீழ் மந்த்ரத்தின் பொருள் அவ்விடத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறபடியே தான் என்பது விளங்கும்.

[ப - ரை.] **विश्वरूपम्** - ஸகலத்தையும் தனது சரீரமாக உடைத்தாயிருக்கிறவும், **जातवेदसम्** - ஸர்வ ஜ்ஞாநத்திற்கும் உத்பாதகனாயிருக்கிறவும், **परायणम्** - எல்லாருக்கும் பரமமாக அடையக்கூடிய வஸ்துவாகவும், **ज्योतिः** - எல்லாவற்றையும் ப்ரகாஶிப்பிக்கும்படியான தீப்தியை உடைத்தாயிருக்கிறவும், **एकम्** - நிகரற்றிருக்கிறவும், **तपन्तम्** - [ஸூர்யன் முதலான ரூபங்களால் ஜகத்திற்குத் தேவையான] உஷ்ணத்தைக் கொடுத்துக்கொண்டுமிருக்கும், **हरिणम्** - 'ஹரி'யாகிற பரமாத்மாவை, **वर्तमानः** - அநுவர்த்தித்துக்கொண்டும் [அவனால் தரிக்கப்பெற்றும் நியமிக்கப்பெற்றும் அவனுக்கு ஶேஷமாயும் இருந்துகொண்டு], **सहस्ररश्मिः**- [பல விஷயங்களைப்பற்றிய] பலவகைப்பட்ட ஜ்ஞாநத்தை உடையவனாயும், **प्रजानां प्राणः** - ஸ்தாவர ஜங்கம ரூபமாயிருக்கும் ப்ராணிகளுக்கெல்லாம் தாரகனாயும் இருந்துகொண்டும், **एष सूर्यः** - ஸூர்யன் போல் ஜ்யோதிஸ் ரூபமாயுள்ள இந்த ஜீவன், **शतधा उदयति** - பஹு ப்ரகாரமாக [ஸ்ருஷ்டி காலத்தில்] ஜநநத்தைப் பெறுகின்றான்.

இவ்விடத்தில் ப்ரயோகம் செய்யப்பட்டுள்ள 'வைஶ்வாநர' 'அக்நி' முதலான ஶப்தங்கள் இவ்விடத்தில் பரமாத்மாவுக்கு வாசகங்கள் என்று நமது ஆசார்யர்கள் நிர்வஹித்திருக்கிறார்கள். வைஶ்வாநராதிகரணத்தில், வைஶ்வாநர ஶப்தத்தின் பொருளை விசாரிக்குமிடத்தில், ஸ்ரீ பாஷ்யகாரர் பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார். "**वैश्वानरशब्दस्साधारणोऽपि परमात्मासाधारणधर्मविशेषितो विश्वेषां नराणां नेतृत्वादिगुणेन परमात्मानमेवाभिदधातीति निश्चीयते**" [வைஶ்வாநர என்னும் ஶப்தம் பஞ்ச பூதங்களுள் ஒன்றான அக்நியைக் குறிக்கும்; ப்ராணிகளின் வயிற்றிலுள்ள ஜாடராக்நியையும் குறிக்கும்; வைஶ்வாநரனென்று பெயருள்ள ஒரு தேவதா விஶேஷத்தையும் குறிக்கும்; ஸாக்ஷாத் பரமாத்மாவையும் குறிக்கும். இப்படி அது அநேக வஸ்துக்களுக்குப் பொதுவான வாசகமாக இருக்கையிலும், பரமாத்மாவுக்கு அஸாதாரணங்களான தர்மங்களால் விஶேஷிக்கப்பட்டதாயிருக்குமிடங்களில் பரமாத்மாவையே குறிக்கின்றது என்று அவயவ ஶக்தியைக்

கொண்டு நிஶ்சயம் செய்யக்கூடும். அந்த அவயவ ஶக்தி எப்படி என்றால்:—'**विश्वेषान्नराणां नेता** 'எல்லா ப்ராணிகளுக்கும் ப்ராப்யன்' என்னும் வ்யுத்பத்தியால் அது கிடைக்கின்றது என்பது இந்தத் திவ்ய ஸூக்தி. **विश्वान् नरान् नयति** [ஸகல ப்ராணிகளையும் தன்னிடம் நயிப்பித்துக்கொள்ளுகிறான்] **इति विश्वानरः, विश्वानर एव वैश्वानरः**; 'ரக்ஷஸ்' என்னும் ஶப்தம் 'ராக்ஷஸன்' என்று மாறுவதுபோலும், 'வயஸ்' என்பது 'வாயஸம்' என்று மாறுவதுபோலும், 'விஶ்வாநர' என்பது 'வைஶ்வாநர' என்று மர்றுகின்றது. 'அக்நி' என்னும் ஶப்தமும் அம்மாதிரியே அவயவ ஶக்தியால் பரமாத்மாவையே குறிக்கும். **अग्रं नयतीति अग्निः** [உத்க்ருஷ்டமான ப்ராப்யத்தை அடைவிப்பிக்கிறான்.] 'அக்ரம்' என்பது 'ப்ராப்யத்தைக் குறிக்கின்றது. அம்ருதத்வ ரூபமான பரம புருஷார்த்தத்தைப் பரமாத்மா ஒருவனே கொடுக்கத் தகுந்தவனுதலால், அவனை 'அக்நி' என்னும் பதத்தால் நிர்த்தேஶிப்பது உபபந்நமே. **जातवेदस** என்னும் ஶப்தமும் பரமாத்மாவுக்கு வாசகமாகக் கூடும். **जातानि वेदांसि [वेदाः] यस्मात् स जातवेदाः** [எவனிடத்திலிருந்து ஸகல ஜ்ஞாநங்களும் உத்பத்தி பெறுகின்றனவோ, அவன் 'ஜாதவேதஸ்'. "**प्रज्ञा च तस्मात् प्रसृता पुराणी**" [அவனிடமிருந்தே அந்தப் புராணமான ஜ்ஞாநம் ப்ரஸரித்தது] என்று சொல்லப்பட் டிருக்கின்றதன்றே?;

'**हरिणम्**' என்பதை '**हरिम्**' என்று எடுத்துக்கொண்டு அது பரமாத்மாவைக் குறிக்கின்றதென்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கின்றது. 'ஹரி' ஶப்தம் இ காராந்தமே; வேதமானபடியால் அது ந காராந்தமாக ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது.

இந்த ஸந்தர்ப்பத்தில், நமது ஆசார்யர்களால் நிர்ணயிக்கப் பெற்று அநேக ஸ்தலங்களில் ஸஞ்சாரம் செய்யப்பட்டுமுள்ள ஒரு ந்யாயத்தை நாம் தெரிந்துகொள்ளவேண்டியது ப்ராப்தம். அது என்னவென்றால்:—முதலில் ஸாமாந்யமாக ஒரு பதத்திற்கு அர்த்த நிர்ணயம் செய்யும் விஷயத்தில், அந்தப் பதத்திற்கு எது ப்ரஸித்தார்த்தமோ அதுவே ப்ரபலம்; அவயவ ஶக்தியைக்கொண்டு அந்தப் பதத்திற்கு வேறு பொருள் கொள்ளக்கூடுமானுலும், அது, "**रूढिर्योगमपहरति**" என்கிறபடி, துர்ப்பலமே ஆகும். ஆனுல், அந்த ப்ரகரணத்தில் ரூட்யர்த்தத்திற்கு ஒத்து வராதவைகளாகவும் யௌகிகார்த்தத்திற்கு ப்ரத்யபிஜ்ஞாபகங்களாகவுமான பல ப்ரஸித்த லிங்கங்கள் தென்படும் பக்ஷத்தில் அப்பொழுது, "**प्रमाणपरिक्लृप्तो योगो रूढिमेव बाधते**" என்கிறபடி, அந்த லிங்க பரிக்லுப்தமான யோகமானது ரூடியைப் பாதித்துவிடும். இதற்கு த்ருஷ்டாந்தமாக 'ஆகாஶம்' என்னும் ஶப்தத்தை எடுத்துக்கொள்வோம். அது ஸர்வலோக ப்ரஸித்தமான பூதாகாஶத்தையே குறிக்கும். ஆனுல் 'ஆகாஶமானது பராயணம்' என்று அந்த ஆகாஶத்திற்கு பரம ப்ராப்யத்வம் அந்த ப்ரகரணத்தில் சொல்லப்பட்டிருக்கும் பக்ஷத்தில்

ஸ்ரீ :

‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’வின் 1944 மே மாதத்துச் சந்தா வஸூல்.

				ரூ.	அ.
		1943-ம் ஆண்டுச் சந்தா			
216	ஸ்ரீ	T. E. சடகோபாசாரியர், கடலூர்	...	3	0
		1944-ம் ஆண்டுச் சந்தா			
3	ஸ்ரீ	M. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர்	...	3	0
11	,,	V. K. ராகவாசார்யர், பம்பாய்	...	3	0
46	,,	D. ராமஸ்வாமி ஐயங்கார், பம்பாய்	...	3	0
76	,,	O. S. நாராயணையங்கார், மானாமதுரை	...	3	0
86	,,	தொட்டியம் கோமளவல்லி க்ருஷ்ணமாசாரியர், ஸ்ரீரங்கம்	...	3	0
176	,,	A. V. ஸ்ரீநிவாஸையங்கார், ஈரோட்	...	3	0
193	,,	T. R. ராஜகோபாலையங்கார், கோயம்புத்தூர்	...	3	0
206	,,	Y. வேங்கடாசார்யர், போதனூர்	...	3	0
502	,,	P. நரஸிம்ஹையங்கார், காசாங்குளம்	...	3	0
550	,,	A. S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மேல் மாம்பலம்	...	1	8
595	,,	R. திருமலை ஐயங்கார், நாகனூர்	...	3	0
596	,,	S. R. ஸ்ரீநிவாஸாசாரியர், திருவையாறு	...	3	0
598	,,	S. R. S. ராகவன், மாதுங்கா, பம்பாய்	...	3	0
599	,,	N. P. பொன்னுஸாமி ரெட்டியார், அழகநத்தம்	...	3	0
600	,,	R. ராகவசார்யர், ஹைதராபாக்கம்	...	3	0
601	,,	K. ஸுந்தரவரதாசார்யர், ஹைதராபாக்கம்	...	3	0
602	,,	V. S. ஆசார்யா, ஹைதராபாக்கம்	...	3	0
603	,,	T. வேதாந்தாசார்யர் மயிலாப்பூர்	...	3	0
604	,,	M. ரங்கஸ்வாமி ஐயங்கார், சேலம்	...	3	0
		1945-ம் ஆண்டுச் சந்தா			
539	ஸ்ரீ	S. ஸம்பத் நாராயணன், சோளங்கிபுரம்	...	1	8

சந்தாதாரர்களுக்கு விஜ்ஞாபநம்

1943-ம் ஆண்டின் தொகையைச் செலுத்தாத சந்தாதாரர்கள், தயைசெய்து தங்கள் சந்தாத் தொகையை ஜூன்மீ 30-தேதிக்குள் செலுத்தவேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். அங்ஙனம் செலுத்தாதார்க்கு ஜுலை மாஸத்து ஸஞ்சிகை அனுப்பப்படமாட்டாது.

—ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஒரு நன்கொடை

ஸ்ரீ முஷ்ணத்தில் எழுந்தருளி யிருக்கும் தட்டை ஸ்ரீ. உப. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, சென்ற மாஸத்தில் தமது க்ருஹத்தில் நடந்த ஒரு ஶுப உத்ஸவத்தில், ஸ்ரீ மதுராந்தகம் ஶாஸ்த்ர பாடஶாலையை உத்தேஶித்து 35—0—0 ஸம்பாவனை செய்தார். இதை நாம் க்ருதஜ்ஞதையுடன் அங்கீகரிக்கிறோம். இம் மாதிரி இதரர்களும் அவகாஶம் நேரும் காலத்தில் ஆழ்வார் ஆசார்யர்கள் ஸம்பாவனையுடன் இந்தப் பாடஶாலை ஸம்பாவனையையும் செய்துவந்தால், அது ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் உகந்ததொரு கைங்கர்யமாகும்.

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்
விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. ௸ (பைண்டில்லாதது) ...	5—8—0	6—8—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் („)	0—8—0	0-12—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் ... (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் („)	0—8—0	0-12—0
7. ௸ (தெலுங்கு லிபி)	0-12—0	1—0—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0-12—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
10. ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
11. ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
12 ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழிபெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0—0	1—8—0

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.